"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

சைவ முன்னேற்றச் சங்கம் UNITED KINGDOM கலசம்

SAIVA MUNNETTA SANGAM UNITED KINGDOM

சித்திரை - வைகாசி - ஆனி 2010




இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்


Veena's @ barkingside
Indian Shopping made easy
English & Tropical food
NEWLY OPENED
Wide range of products
Many more offers in store
Fresh Vegetables
Frozen foods
Wide range of Asian Foods
Veena's
77-79, High Street, Barkingside, Essex IG6 2AF Tel: 0208 550 2700 www.veenas.com

மணி 18

# கலசம்
# KALASAM

ஒலி 65

www.smsuk.info
E-mail: kalasam@gmail.com

## பெற்றதை இழக்கலாமா?

நம்முடைய நாயன்மார்களும் அருளாளர்களும் பாடிவைத்த திருமுறைப் பாடல்களை ஓர் அறையிலே பூட்டி வைத்தார்கள். அவற்றைக் கறையான்கள் அழித்துவிட்டன. இது தமிழை அழிப்பதற்காக வேண்டுமென்றே செய்யப்பட்ட சதி என்பர் ஒருசாரார்.

"அர்ச்சனை பாட்டே ஆகும் ஆதலான் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்"

என்று சேக்கிழார் பாடியுள்ளார். எனவே தமிழிலேதான் அர்ச்சனை செய்யவேண்டும். நமக்குப் புரியாத மொழியிலே ஏன் வழிபடவேண்டும்? வடமொழியை ஒதுக்கவேண்டும். தமிழை வளர்க்கவேண்டும் என்பர் ஒரு சாரார்.

தேவாரம், திருவாசகம் எமக்குப் புரியவில்லை. "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்" என்று மாணிக்கவாசகர் பாடியுள்ளார். எங்களுக்குப் பொருள் விளங்கவில்லை. ஆகவே நாங்கள் இலகுவான பாடல்களை, பத்திப் பாடல்களை மட்டுமே பாடுவோம் என்பர் இன்னொரு சாரார்.

இப்படிச் சொல்லிக்கொண்டு இந்த மூவகை மக்களும் நம்மிடம் உள்ள திருவருட் பாடல்களைப் பயில்வதுமில்லை; பாட முயல்வதுமில்லை. நற்றமிழ் ஞானசம்பந்தர் அருளிய பாடல்கள் மட்டும் இன்று நாலாயிரத்துக்கு மேல் நம்மிடம் உள்ளன. பன்னிரண்டு திருமுறைகளிலும் பதினேழா யிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் உள. அது தவிர, திருப்புகழ், அபிராமி அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி என்று எத்தனையோ.

நமக்கு முன் இறைவனை உணர்ந்த இந்த ஆன்றோர்கள் பாடியருளிய தமிழ்த் திருப் பாடல்களைப் பயிலாது, பாடாது இருந்துவிட்டு, தமிழ் வேண்டும் என்றும், தமிழை வளர்க் கிறோம் என்றும், தமிழ் புரியவில்லை என்றும், தமிழில் அர்ச்சனை என்றும் சொல்வதில் எந்தவித அர்த்தமுமில்லை. இறை சிந்தனையோடு அருட் பாடல்களைப் பாடப் பாட, நமக்கும் இறையுணர்வு வரும். அந்தத் திருப்பாடல்களை அருளிய அருளாளர்களின் நிலைக்கு நம்மை நாம் ஆன்மிகத்தில் உயர்த்திக்கொள்ள ஓரளவு அவை துணைபுரியும். நம் முன்னோர் நமக்கென்று தேடிவைத்த பொக்கிஷங்களான அந்தத் திருமுறைப் பாடல்களை நாம் தொலைக்கலாமா? பாடாமல் அழியவிட்டு இழக்கலாமா?

கோயில்களிலும் வீடுகளிலும் திருமுறைகளைப் பாடுவோம்! அடுத்த சந்ததிக்கு அவற்றை அளிப்போம்.

**நிர்வாகக் குழு:** திரு. க. ஜெகதீசுவரன் (ஆசிரியர்) திரு. ச. ஆனந்ததியாகர் திரு. சி. தம்பு
திரு. சி. அற்புதானந்தன் திரு. வ. இ. இராமநாதன் திரு. சு. வைத்தியநாதன்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732


# இந்த இதழில்


| | |
|---|---|
| ஆளுடையபிள்ளை - பெரியபுராணத்தொடர் | 03 |
| விடியுமென்று நம்பி...... - கந்தபுராணச் சிந்தனைகள் | 06 |
| சலமிலன் சங்கரன் | 07 |
| பாற்கஞ்சி - சிறுகதை | 08 |
| நற்றுணையாவது நமச்சிவாயவே | 12 |
| ஆன்மாவின் பரிணாம வளர்ச்சியை....... | 15 |
| ஆன்ம விடுதலை எப்போது? | 23 |
| நான் பெற்ற இன்பம்.... - ஒரு சிறுமியின் அநுபவம் | 26 |
| தகராறு | 27 |
| தேன் வந்து பாய்ந்தது..... - இசை விமரிசனம் | 30 |
| அயோத்தி - பயணக்கட்டுரை | 33 |
| கண்ணனும் தாத்தாவும் | 36 |
| திருக்குறள் | 40 |
| Hinduism in search of Answers | 42 |


**அட்டைப்படம்: திருத்தவத்துறை ச. வேதா**

# ஆளுடைய பிள்ளை

(மு.சிவராசா)



ஆளுடைய பிள்ளை, ஆளுடைய அரசு, ஆளுடைய நம்பி என இவ்வருட் பெயர்களால் குறிக்கப் படுவோர் தேவார முதலிகளாகிய திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆவர். பரம்பொருளாகிய சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டதால் இவர்களுக்கு இவ்வருட் பெயர்கள் வழங்கப்பெறுகின்றன.

இறைவனை வழிபட்டு முத்தியடைவதற்கு சைவசமயத்தில் நான்கு வழிகள் சொல்லப்படுகின்றன. சரியை (தாசமார்க்கம்), கிரியை (சற்புத்திர மார்க்கம்), யோகம் (சகமார்க்கம்), ஞானம் (சன்மார்க்கம்) என்பன அவை. இம் மார்க்கங்களைக் கடைப்பிடித்து ஒழுகுவோர் அடையும் முத்தியும் நான்கு வகையாம். அவையாவன முறையே சாலோகம் (சிவன் உலகை அடைதல்), சாமீபம் (சிவன் சமீபத்திருத்தல்), சாரூபம் (சிவன் திருவுருவம் பெற்றிருத்தல்), சாயுச்சியம் (சிவனோடு இரண்டறக் கலத்தல்) என்பனவாம். ஞானசம்பந்தர் காலத்தில் தமிழ்நாட்டில் சைவசமயம் தன் நிலை குன்ற, சமண பௌத்த சமயங்கள் மேலோங்கி இருந்தன. அந்நாளில் சிவனது திருவருள் துணைகொண்டு பல அற்புதங்கள் நிகழ்த்தி, சைவசமயமே மெய்ச்சமயம் என நிறுவியவர் திருஞானசம்பந்தர். இவர் சீர்காழி என்னும் பதியில், சிவபாதவிருதயர் பகவதியார் ஆகியோருக்கு மகனாக, சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று அவதரித்தார். தமது மூன்றாவது வயதில் ஒரு நாள் தந்தையாருடன் திருக்கோயிலுக்குச் சென்றார். கோயில் குளத்தில் தந்தையார் நீராடும் போது குழந்தை குளக்கரையில் அமர்ந்திருந்தது. நீராடும் போது தந்தையார் நீரில் முங்கியிருக்கையில் தந்தையைக்காணாத குழந்தை 'அம்மே! அப்பா!' என அழைத்து அழுதது. இறைவனால் ஆட்கொள்ளப்படும் தகுதி பெற்றமையால் அந்நேரம் பிரமபுரீஸ்வரர் தேவியுடன் குழந்தை முன் தோன்றினார். அவர் பணித்தபடி தேவி குழந்தையின் கண்ணீரைத் துடைத்து தமது திருமுலைப்பாலை பொற்கிண்ணத்தில் கறந்து (ஞானம் கலந்த அப்பாலை) ஊட்டினார். அப்போதே ஞானம் பெற்ற குழந்தை ஞானசம்பந்தர் ஆனது. இறைவனும் தேவியும் மறைந்தருள, ஸ்நானத்தை முடித்துக்கொண்ட சிவபாதவிருதயர் குழந்தையின் வாயிலே பால் வடிவதைக் கண்டார். 'யார் தந்த எச்சிற்பாலைப் பருகினாய்' என்று கோபித்துக்கேட்க, மகனார் கோயிற் கோபுரத்தைச் சுட்டிக்காட்டி, "தோடுடைய செவியன்" என்னும் பாடல்மூலம் பதில் கொடுத்தார். ஆச்சரியத்துடன் மகனையும் கொண்டு கோயிலுக்குப் போய் இறைவன் அருளைப் போற்றி இருவரும் ஆலய தரிசனம் செய்தனர். நிகழ்ந்தவற்றை அறிந்த மக்கள்

யாவரும் அதிசயம் கொண்டு சம்பந்தரைப் போற்றிப் புகழ்ந்தனர். இறைஅருள் பெற்ற குழந்தை தலங்கள் தோறும் சென்று சுவாமியைத் தரிசனம் செய்ய விரும்பியது. சீர்காழியின் சமீபத்தில் உள்ள திருக்கோலக்கா என்னும் தலத்துக்கு குழந்தையைத் தந்தை தோளில் சுமந்து சென்றார். சுவாமி சந்நிதியில் தன் சின்னஞ்சிறிய கைகளால் தாளம் போட்டுக் கொண்டே "மடையில் வாளை பாய" என்ற பதிகத்தைக் குழந்தை பாடிற்று. பெருமான் சத்தபுரீசுவரர் அது சமயம் பொன்னாலான தாளம் ஒரு சோடு குழந்தையின் கையில் கிடைக்க அருள் புரிந்தார். பொன்தாளம் தட்டப்பட்டால் ஓசை எழாது. அத்தாளத்தில் ஓசை வரும்படி அருள்புரிந்த காரணத்தால் அக்கோயில் இறைவி ஓசைகொடுத்த நாயகியானார்.

தொடர்ந்து தலயாத்திரை மேற்கொண்ட ஞானக்குழந்தையை சிவனடியார்கள் சூழ்ந்து யாத்திரை செய்வாராயினர். இந்நிலையில் ஞானசம்பந்தரின் பெருமையை அறிந்த நீலகண்ட யாழ்ப்பாணர் என்பாரும் அவர் மனைவி மதங்கசூளாமணியாரும் சீர்காழி வந்து அவரைத் தரித்தனர். பாணர் குலத்தவரான இவர்கள் முறையாக யாழ் வாசிப்பதிலும் பாடுவதிலும் வல்லவர்கள். தாங்கள் ஞான சம்பந்தருடன் தங்கி அவர் பாடும் பாசுரங்களுக்கு அநுசரணையாக யாழ் வாசிக்க அநுமதி பெற்று, அவ்வண்ணமே ஒழுகுவாராயினர். பாணர் என்பவர்கள் அக்காலத்தில் தாழ்ந்த குலத்தவராகக் கருதப்பட்டவர்கள்.

அடியவர்கள் புடைசூழ, தளர்ந்த நடையாகவும் தந்தை தோள்மீது அமர்ந்தும் தல யாத்திரை மேற்கொண்ட சம்பந்தப் பெருமான் பயன்படுத்தும் வண்ணம் திருநெல்வாயில் அரத்துறை என்னும் பதியில் சிவிகை ஒன்றை இறைவன் அவருக்கு வழங்கியருளினான். அவ்வப்போது சிவிகையில் ஊர்ந்து தலயாத்திரை செய்தபோது அருளிச்செய்த திருப்பதிகங்கள் 1600 என்பர். ஆயின் இப்போது நமக்குக் கிடைத்துள்ளவை 383 மட்டுமே. பாடற்தொகை 4147 ஆகும். இவற்றில் 7 பதிகங்கள் பொதுவாகவும் மீதி 219 தலங்கள் மீதும் அருளப்பட்டவை. இவற்றுள் சில பதிகங்களால் அற்புதங்கள் நிகழ்ந்தன. தன்னலம் பாராது பொதுநல நோக்கில் அருளப்பட்ட பதிகங்கள் அவை. ஞானப் பால் உண்டதால் திருஞானசம்பந்தர் ஓதாமலே வேதம் உணர்ந்தமையை, 'நற்றமிழ் ஞானசம்பந்தன் நான்மறை கற்றவன்' என்ற அவர் கூற்றினாலேயே அறியலாம். அன்றியும் தாம் சொல்வன இறைவன் சொல்வனவே என்பதை, 'எனதுரை தனதுரையாக' என திரு இலம்பயங்கோட்டூர் பதிகம் மூலம் அறிவிக்கிறார்.

சீர்காழித் தேவர், புகலிவேந்தர், சண்பையர்கோன், காழியர் மன்னன், சைவசிகாமணி போன்ற பல பெயர்களாலும் அறியப்படும் திருஞானசம்பந்தர் காலத்தில் வாழ்ந்த திருநாவுக்கரசர், சிறுத்தொண்டர், முருகர், நீலநக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நின்றசீர் நெடுமாறனார், குலச்சிறையார், மங்கையர்கரசியார் ஆகியோர் அவருடன் தொடர்பு கொண்டிருந்தமை மட்டுமன்றி பெரியபுராணத்தில் பேசப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் அடங்கும் பெருமையும் பெற்றவர்கள். அந்தணர் குலத்தில் அவதரித்த ஞானசம்பந்தருக்கு குல ஆசாரப்படி உபநயனம் செய்ய வேண்டிய வயது வந்தது. சிவஞானம் கைவரப்பெற்றவராயினும் முறைப்படி குருஉபதேசம் பெறல் வேண்டுமென உறவினர் வற்புறுத்தினர். அவ்வாறே பூணூல் சடங்கு நடைபெற்றது. மந்திர உபதேசம் செய்யப்பெற்ற குழந்தை சடங்கு நடத்த வந்திருந்த ஆசாரியர்களுக்கு பஞ்சாட்சர மந்திர மகிமையை விளக்கி, "துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்" எனத் தொடங்கும் பஞ்சாட்சரப் பதிகம் பாடியருளினார்.

இவர் வரலாறு கேள்வியுற்ற நாவுக்கரசு பெருமான் சீர்காழி வந்து இவருடன் அளவளாவித் தங்கியிருந்தார். பின்னர் இருவரும் சேர்ந்து பல சிவத்தலங்களைத் தரிசிக்கச் சென்று ஆங்காங்கு தேவாரத் திருப்பதிகங்களை பாடியருளினார்கள். இருவரும் தனித்தனியாக தலயாத்திரை செய்ததும் உண்டு. ஒருபோது ஞானசம்பந்தர் திருப்பாச்சில் ஆசிரமம் என்னும் தலத்துக்குச் சென்றிருந்தார். அங்கு கோயில் தரிசனத்துக்காக உள்ளே சென்ற போது கொல்லிமழவன்

என்பவருடைய மகள் முயலகன் எனும் நோய் வாய்ப்பட்டு சந்நிதானத்தில் இருக்கக் கண்டார். விவரம் அறிந்து, அவள் நோய் தீரும்படி இறைவனை வேண்டி, திருப்பதிகம் பாட அவள் நோய் நீங்கி எழுந்தாள். இன்னொரு போது பட்டீச்சரம் போனார். அங்கு வெயில் அகோரமாய் எறித்தது. உடன் வந்த அடியவர்கள் அதனைத் தாங்க முடியாது அல்லற்பட்டனர். இவர்படும் துன்பத்தை நீக்கி திருவுள்ளம் கொண்ட சம்பந்தப் பெருமான், அந்த இடத்தில் நிழல் கொடுக்க ஒரு பந்தர் அமையும்படி அருள் செய்தார். அந்தப் பந்தர் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட முத்துப்பந்தர். திருவோத்தூர் என்னும் தலத்துக்குச் சென்ற போது அவ்வூர்ப் பனைகள் எல்லாம் காய் தராத ஆண்பனைகளாக இருந்தமையை மாற்றி குலை ஈனும் பெண் பனைகளாகும் படி திருப்பதிகம் அருளினார்.

மற்றொரு சமயம் சைவசிகாமணி திருஆவடுதுறை வந்தார். உடன் வந்த அடியவர்களுள் சிவபாத விருதயரும் இருந்தார். அவர் தம் கடமைகளில் ஒன்றான யாகம் செய்வதற்கு பொருள் தேவைப்பட்டது. மகனிடம் தம் தேவையை எடுத்துரைத்தார். அவர் தம்மை ஆட்கொண்ட தந்தையாகிய செம்பொற் தியாகரை வேண்டி 'இடரினும் தளரினும்' என்னும் பதிகம் பாடினார். ஆயிரம் பொற்காசு கொண்ட பொன்முடிச்சு ஒன்று கிடைத்தது. அது எடுக்க எடுக்கக் குறையாத பொன்னைக் கொண்ட உலவாக்கிழி, அதனைத் தந்தையிடம் கையளித்து அவரும் சீர்காழியில் உள்ள அந்தணப் பெருமக்களும் யாகம் செய்வற்குப் போதுமான பொன் அதில் உள்ளதெனக் கூறினார். பெற்றுக்கொண்ட தந்தை சீர்காழி திரும்பினார்.

ஒருநாள், தருமபுரம் என்ற தலத்திலே தங்கியிருந்த போது சுவாமி சந்நிதானத்தில் பாணனார் ஒரு வேண்டுகோள் விடுத்தார். காழிப்பிள்ளை அருளும் பாடல்களுக்கு இசைவாக தாம் யாழ் வாசிப்பதாகவும் யாழில் அடங்காத பண்ணில் ஒரு பதிகம் பாடியருள வேண்டும் என்பது அந்த வேண்டுகோள். அதற்கிசைந்த சம்பந்தர் யாழ்மூரிப் பண்ணில் அமைய, "மாதர் மடப்பிடியும்" எனத் தொடங்கும் பதிகத்தை அருளினார். அதைப் பாணர் யாழில் அமைத்து வாசிக்கமுடியில்லை. மனம் நொந்த பாணனார் தமது யாழை முறிக்க முயன்றார். பிள்ளையார் தடுத்து யாழை வாங்கிக் கொண்டு பாணரைத் தேற்றினார். பிறிதொருசமயம் திருச்சாத்தமங்கையில் நீலநக்கருடனும் சிறுத்தொண்டருடனும் தங்கி சுவாமி தரிசனம் செய்தார். திருமருகல் சென்றபோது ஆலயத்துக்குச் சமீபத்தில் இருந்த மடம் ஒன்றிலிருந்து ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. அருகில் சென்று பார்த்தார். வணிக இளைஞன் ஒருவன் பாம்பு தீண்டி இறந்து கிடந்தான். அவனை மணம் செய்ய இருந்த கன்னி அவனருகே அழுது கொண்டிருந்தாள். கருணை உள்ளம் கொண்ட புகலிகாவலர் 'சடையாய் எனுமால்' என்னும் திருப்பதிகம் பாடியருள வணிகன் உயிர்பெற்றெழுந்தான். இருவருக்கும் திருமணம் நடக்க அருள்புரிந்தார். கொள்ளம்புதூர் ஆலய தரிசனம் செய்வதற்கு முள்ளிவாய் எனும் ஆற்றைக் கடக்க வேண்டியிருந்தது. ஆற்றங்கரையில் ஓடங்கள் இருந்தன. ஆனால் ஓடக்காரர் எவரும் அந்நேரம் அங்கில்லை. சம்பந்தப் பெருமான் அடியவர்களையும் ஓடத்தில் ஏற்றி, "கொட்டமே கமழும்" என்னும் பதிகம் பாட ஓடம் மிதந்து மறுகரை சேர்ந்தது. ஆலய தரிசனம் முடித்து மீண்டும் முன்போலவே இக்கரையை அடைந்தனர்.

- தொடரும் ....

கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணிஅதரம் புடைதுடிப்ப
எண்ணில்மறை ஒலிபெருக எவ்வுயிரும் குதூகலிப்ப
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமியழு தருளினார்

- சேக்கிழார்

# விடியுமென்று நம்பி இருளில் வாழவேண்டும்

## கந்தபுராணச் சிந்தனைகள்

சிந்திப்பவர். முனைவர் சங்கரப்பிள்ளை சிவலோநாதன்

வாழ்க்கையிலே இருளில் மூழ்கிக் கஷ்டப்படுபவர்கள் அதிகம். வறுமை, நோய், உதவியின்மை, வாய்ப்பின்மை என்று பலவிதமான தொல்லைகள் எம்மைச் சூழ்ந்து வளமான வாழ்வைக் கிடைக்காமல் செய்கின்றன. நம்பிக்கையற்ற சூழ்நிலையே ஒருவனுடைய வாழ்வின் முழுப் பயனையும் அடித்துக்கொண்டுபோய்விடுகிறது. ஒரு சமூகத்தை அழிக்கவேண்டுமானால் அதற்குள்ள 'எதிர்கால நம்பிக்கையை' அழித்துவிடவேண்டும். அதாவது ஒரு 'hopeless situation' ஐ ஏற்படுத்தவேண்டும் என்பார்கள். இவ்வாறாக நம்மிற் பலருக்கு இந்த நம்பிக்கையே அற்றுப்போகின்ற நிலைகள் வரும். அவ்வாறான நேரங்களில் தளர்வடையாமல் 'விடியுமென்று நம்பி இருளில் வாழவேண்டும்' என்று கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் சொல்கிறது.

இந்திரன் தேவர் உலகத்துக்கு அதிபதி. வெகு வசதியாக வாழ்ந்து வருகிறான். சூரன் இந்திரனைச் சிறையில் அடைத்துவிட்டு அவனுடைய மனைவியான இந்திராணியைக் கவர்ந்து கொள்ள எண்ணினான். அதன் பின்விளைவுகளைச் சிந்திக்கவில்லை. ஒரு நாள் அசுரப் பெண்களைப் படையாக அனுப்பி இந்திராணியைக் கொணருமாறு கட்டளையிடுகிறான். இந்திரன் மிகவும் பயந்து, இந்திராணியுடன் தேவலோகத்தை விட்டுப் பூலோகத்துக்கு ஓடிவிடு கிறான். தந்தையார் தளர்ந்துவிட்டால் பிள்ளைகள்தான் குடித்தலைமையை ஏற்று நடாத்தவேண்டுமென எண்ணித் திருமாலுடன் இருந்த இந்திரனின் மகன் சயந்தன் தேவ லோகத்துக்கு வருகிறான். நாரதர் தேவலோகத்துக்கு வருகிறார். நாரதரிடம் தன் கவலையைத் தெரிவிக்கிறான் சயந்தன். அதைக்கேட்ட நாரதர் சொல்லுகிறார்.

தீமையானது வந்து சேர்வதும், நன்மை வந்து சேர்வதும் அவரவர் செய்த தீவினை நல்வினைகளால் உண்டாவன. அவ்வாறின்றி அவை மற்றயோரால் வருவதில்லை. அமுதம், நஞ்சு இரண்டுக்கும் உள்ள சுவை வேறுபாடு பிறிதொருவரால் கொடுக்கப்படவில்லையே. எல்லாம் அறிந்தவர்கள் இன்பம் வந்தபோது நன்று என்று மகிழ்ச்சியடையவும் மாட்டார்கள். துன்பம் வந்தபோது விரைந்து நடுங்கவும் மாட்டார்கள். இன்பமும் துன்பமும் இவ்வுடலோடு இணைந்ததென்று பழைய தொடர்பை நினைவு கூருவர்.

> இன்பம தடைந்த காலை இனிதென மகிழ்ச்சி எய்தார்
> துன்பம துற்ற போதுந் துண்ணெனத் துணங்கிச் சோரார்
> இன்பமுந் துன்பந் தானும் இவ்வுடற் கியைந்த வென்றே
> முன்புறு தொடர்பை ஓர்வார் முழுவதும் உணர்ந்த நீரார்
>
> இந்திரன் கரந்துறை படலம் -34

தொடர்ந்து நாரத முனிவர் சொல்லுகிறார். ஒரு காலத்தில் செல்வராய் இருப்பவர் பின் ஒரு காலத்தில் வறியவர் ஆவர். ஒரு காலத்தே சிறுமைப்பட்டிருந்தவர் பின் ஒரு காலத்தே பெருமை உடையவர் ஆவர். இது மாறி மாறி நடைபெறும். இவ்வாறு நடைபெறுவது முற்பிறவியினின்று தொடர்ந்த ஊழ்வினையேயாகும். கதிரவன் பரவுவதற்கிடமான இந்தப் பூமியின் இயற்கையும் இதுவேயன்றோ? 'செல்வமும் வறுமையும் துன்பமும் மகிழ்ச்சியும் ஆகிய இவையெல்லாம்

நிலையானவையென்று கொள்ளமுடியுமோ? தெய்வத் தன்மை வாய்ந்த சந்திரனின் ஒளிக்கூட்டம் கூடக் கூடுவதும் குறைவதுமாகவே இருக்கின்றன. எனவே உங்களின் தாழ்வும் அவுணரின் உயர்வும் என்றும் நிலைக்கமாட்டா. இச் சூரபன்மன் கூட இறந்துபடுவான். உங்கள் துயரம் நீங்கும். இதை நன்றாக நம்பு.

இவ்வாறு நாரதரால் தேற்றப்பட்ட சயந்தன் பின்னர் பானுகோபனால் சிறை பிடிக்கப்பட்டதும் அவனைச் சிறை மீட்கச் சென்ற முருகப்பெருமான் அசுரர்களைக் கிளையோடு அழித்துத் தேவர்களுக்கு வாழ்வு கொடுத்ததும் இதனைத் தொடர்ந்த நிகழ்வுகளாகும். தேவர்களுக்கு ஏற்பட்ட ஒரு மிகவும் கஷ்டமான காலகட்டத்திலே, அவர்கள் அதை எவ்வாறு எதிர்கொண்டு சமாளித்தார்கள், இந்திரன் எவ்வாறு கடுந் தவத்தினாலும், விடா முயற்சியினாலும் சிவபெருமானை வணங்கி முருகப் பெருமான் மூலம் தம்முடைய இழந்த திருவை பெற்றார்கள் என்றும் கந்தபுராணம் தெளிவாக எடுத்துச் சொல்கின்றது. இதன்மூலம் நாமும் கஷ்டம் வந்த காலங்களிலே முயற்சியையும் உயர்ச்சிக்கான சிந்தனையையும் கைவிடாது ‘விடியும் என்று நம்பி இருளில் வாழவேண்டும்’ எனக் கந்தபுராணம் வழிகாட்டி நிற்கின்றது.

## சலமிலன் சங்கரன்

நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர்சங் கரன்

- திருவருட்பயன்

தன்னை நண்ணாதவர்க்கு (அணுகாதவர்களுக்கு) நலமிலன். நண்ணினர்க்கு நல்லன். சலமிலன். பாரபட்சமற்றவன்; விருப்பு வெறுப்பு அற்றவன். அவன்தான் இறைவன். அவன் பெயர் சங்கரன். ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்பவன். சலமிலன் என்றால் அவன் ஏன் நண்ணினர்க்கு மட்டும் நல்லன்? என்று ஒரு கேள்வி எழுகின்றது.

ஊரின் நடுவில் ஓர் ஆலமரம் இருக்கிறது. கோடை காலத்தில் அதன் கீழே யார் போய் நின்றாலும் அது நிழல் கொடுக்கும். அரசனாக இருந்தாலென்ன, ஆண்டியாக இருந்தாலென்ன, பணக்காரனாக இருந்தாலென்ன, பரம ஏழையாக இருந்தாலென்ன ஆலமரம் நிழல் கொடுக்கும். அதற்கு யார், எவர் என்ற பேதமில்லை. ஆனால் மனிதரைத் தேடிப்போய் அது நிழல் கொடுக்காது. அதுபோலவே கடவுளும் தன்னை நாடி வருபவர்க்கு, அவர் யாராக இருந்தாலும் அருள்புரிவார். நாடாதவர்க்கு அருள் கிடையாது.

“தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானை” என்றும்
“சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கல்லால்
நலமிலன் நாள்தொறும் நல்குவான் நலன்” என்றும்

திருநாவுக்கரசு சுவாமிகள் தம் தேவாரத்திலே பாடிப்போந்தார். தண்ணீரானது தான் இருக்கும் பாத்திரத்தின் வடிவையே எடுக்கும். இதைச் சார்ந்ததன் வண்ணம் என்பர். நம் உயிரும் சார்ந்ததன் வண்ணமானது. ஆணவ மலத்துடன் சார்ந்து வினைகளைச் செய்யும் ஆன்மா சிவனைச் சாரும்போதுதான் மலம் நீங்கி பேரின்பத்தை அடையும்.

கருத்து: பண்டிதர் சி கதிரிப்பிள்ளை

# பாற்கஞ்சி

- சி வைத்திலிங்கம்

*திரு வைத்திலிங்கம் அவர்கள் ஈழத்தின் சிறுகதை மூவர் என அழைக்கப்பட்டவர்களில் ஒருவர். மற்றையவர் இருவரும் திரு க தி சம்பந்தன் அவர்களும் இலங்கையர்கோன் என்ற திரு சிவ ஞானசுந்தரம் அவர்களும் ஆவர்.*
*பாற்கஞ்சி என்ற இந்தச் சிறுகதை ஆனந்தவிகடன் வார இதழில், 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆசிரியராக இருந்த காலத்தில், பிரசுரமாகியது. முத்திரைக் கதையாக, பரிசுத் தொகையாக பணமும் பெற்று பிரசுரமான கதை இது. "கங்கா தீபம்" என்ற திரு சி வைத்திலிங்கம் அவர்களின் சிறுகதைத் தொகுதியிலிருந்து இங்கு பிரசுரமாகிறது. பிரசுரிக்க அநுமதி கொடுத்த அவர் குடும்பத்தினருக்கு நன்றி.*

'ராமு என் ராசவான்னா குடிச்சுடுவாய் எங்கே, நான் கண்ணை மூடிக் கொள்றேன்- குடிச்சுடு பார்க்கலாம். நாளைக்குப் பாற்கஞ்சி'

'சும்மா போம்மா, நாளைக்கு நாளைக்கென்று எத்தனை நாளாய் ஏச்சுப்புட்டாய். என்ன தான் சொல்லேன், கூழ் குடிக்கவே மாட்டேம்மா'

'இன்னும் எத்தனை நாள் பஞ்சமடா? வயலிலே நெல் முத்தி விளைஞ்சிவருது. ஒனக்கு வேணும்னு மட்டும் பாற்கஞ்சி தாறனே'

'கூழைப்பாத்தாலே வவுத்தைப் புரட்டுதம்மா. முடியாதுன்னா முடியாது' என்று சொல்லி அழத் தொடங்குகிறான்.

'அப்பா பசியோட காத்துண்டிருப்பாரடா. வயலுக்கு கூழ் கொண்டு போகணும். என்ன பாடுபட்டும் நாளைக்கு கஞ்சி தந்திடுவேனே, ஆமா, என் கண்ணோல்லியோ'.

'நிச்சமாய்ச் சொல்றியாம்மா, நாளைக்குப் பாற்கஞ்சி தருவியா?'

பக்கத்தில் சிறுவர்கள் தம்பளப் பூச்சி பிடித்து வீளையாடும் சப்தம் கேட்டது. அவதி அவதியாய்ப் பத்து வாய்க் கூழ் குடித்தான் ராமு. எல்லாவற்றையும் மறந்து விளையாட ஓடிவிட்டான்.

அந்தக் கிராமத்திலே முருகேசனுடைய வயல் துண்டு நன்றாய் விளையும் வயல்களில் ஒன்று. அதற்குப் பக்கத்திலே குளம் குளத்தைச் சுற்றி பிரம்மாண்டமான மருத மரங்கள். தூரத்தில் அம்பாளின் கோயிற் கோபுரம். இவை எல்லாவற்றையும் சுற்றி வேலி போட்டாற் போல் தூங்கிக் கிடந்தன குடிமனைகள்.

மார்கழி கழிந்துவிட்டது. இப்போது மேகத்திலே கார் ஓடுவதில்லை. ஆம், தைமாதம் பிறந்து துரிதமாய் நடந்து கொண்டிருந்தது.

மாரிக்காலம் முழுவதும் ஓய்ந்து தூங்கிக்கிடந்த ஜீவராசிகள் வழித்து இயங்கத் தொடங்கிவிட்டன. முருகேசன் வயலிலே மும்முரமாய் ஈடுபட்டிருந்தான். பனியிலே ஒடுங்கிக்கிடந்த நரம்புகளிலே சூரிய ஒளி வெள்ளம் பாயவே அவன் தேகத்தில் ஒரு சுறுசுறுப்பு உண்டானது. மெலிந்திருந்த நரம்புகள் இறுகி விண்போல் தெறித்தன. எழுந்து நின்று கண்களைச் சுற்றி தன் வயலைப் பார்த்தான். நெற்கதிர்கள் பால்வற்றி பசுமையும் மஞ்சளும் கலந்து செங்காயாக மாறிவிட்டிருந்தன. 'இன்னும் பதினைந்து நாள்களிலே .....' என்று அவனை அறியாமல் வாய் முணுமுணுத்தது.

முருகேசன் மனத்திலே ஒரு பூரிப்பு, ஒரு ஆறுதல், ஒரு மன அமைதி அவன் பாடுபட்டது

வீண் போகவில்லையல்லவா? ஆனால் மனதில் இதற்கிடையில் காரணமில்லாமல் 'சிலவேளை ஏதேனும்...' யார் கண்டார்கள்? இன்பமும் துன்பமும் கலந்து ஒரு மன ஏக்கம். முருகேசனுக்கு வயலை விட்டுப் போக மனம் வரவில்லை. பொழுது உச்சிக்கு வந்துவிட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. என்றாலும் பயிருக்குள் நுழைந்து ஒவ்வொரு கதிராகக் கைகளால் அணைத்துத் தன் குழந்தைகள் போலத் தழுவிக் கொண்டிருந்தான்.

கண்ணை மின்னிக் கொண்டிருந்த அந்த வெய்யிலிலே காமாட்சி கூழுடன் அப்பொழுது தான் வந்தாள். கூழ்குடித்துக் கொண்டிருக்கும் போது அவளைப் பார்த்து 'போன வருசந்தான் மழையில்லாமல் எல்லாம் சம்பியும் சாலி யுமாய் போயிட்டது. காமு அதோ பார், இந்த வருசம் கடவுள் கண் திறந்திருக்கிறார். கருப்பன் செட்டியின் கடனைத் திருப்பிடலாம். நமக்கு ஒரு வருசத்துக்கு சோத்துக்குக் குறை வராது. எங்க ராமனுக்கு ஒரு சோடி காப்பு வாங்கணும்'. 'என்னையும் மறந்திடாதேங்கோ. எத்தனை வருஷமாய் ஒரு ஒட்டியானம் வாங்கித் தாறன் தாறன் எண்டு'. 'ஏன் ஒரு கூறைச் சேலையும் நன்றாயிருக்குமே!' என்று சொல்லிவிட்டு கண் சிமிட்டினான்.

'ஆமாங்க எனக்குத் தான் கூறைச் சேலை அப்படின்னா உங்களுக்கு ஒரு சரிகை போட்ட தலைப்பா வேணுமே'

'அச்சா, திரும்பவும் புதுமாப்பிள்ளை பொம் பிள்ளையாட்டம் இரண்டு பேரும் ஒரே சோக்குத்தான்' என்று சொல்லி அவளைப் பார்த்து புன்னகை உதிர்த்தான்.

காமாட்சி வெட்கத்தினால் தன் சேலைத் தலைப்பால் முகத்தை அரைகுறையாய் மூடிக்கொண்டு, 'அதெல்லாம் இருக்கட்டும், எப்போ அறுவடைக்கு நாள் வைக்கப் போறீங்க?' என்றாள்.

'இன்னிக்கு சனிக்கிழமை, சனியோடு சனி எட்டு அடுத்த சனி பதினைஞ்சு. ஆம் நல்ல நாள் அதே சனிக்கிழமை வைத்திடுவோமே.'

'தாயே இதற்கிடையில் ஒரு விக்கினமும் வந்துடப்படாது' என்று மனதுள் சொல்லிக்கொண்டாள் காமாட்சி.

ஒரு பெருநாளை எதிர்பார்ப்பது போல் காமாட்சியும் முருகேசனும் அறுவடை நாளை எதிர் நோக்கி இருந்தார்கள்.

காமாட்சி தன் வீட்டில் உள்ள களஞ்சிய அறையைப் மெழுகிக் கோலமிட்டு வைத்தி ருந்தாள். லக்ஷ்மி உறையும் அந்த அறைக்குத் தினமும் தீபமும் ஏற்றிவைத்தாள். மனையாகக் கிடந்த அரிவாள்களைக் கொல்லன் பட்ட றையில் கொண்டுபோய் தேய்த்து வந்தான் முருகேசன். கதிர்ப் பாய்களை வெய்யிலில் உலர்த்தி பொத்தல்களைப் பனை ஓலையால் இழைத்து வைத்தான். ஐந்தாறு நாள்களுக்கு முன்னதாக அயல் வீட்டுக் கந்தையனிடமும், கோவிந்தனிடமும் 'அறுவடைக்கு வந்திட வேணும் அண்ணமாரே' என்று பலமுறை சொல்லி ஞாபகப்படுத்திக் கொண்டு வரலானான். ஆவலும் ஆர்வமும் துடித்து நின்று இவற்றையெல்லாம் செய்யவைத்தது.

அறுவடை நாளுக்கு முதல் நாள், அன்று வெள்ளிக்கிழமை பகல் தேய்ந்து மறைய இன்னும் மூன்று நாழிகைதான் இருந்தது. நிஷ்களங்கமாயிருந்த வானத்திலே திடீரென்று ஒரு கார் முகிற் கூட்டம் கூடியிருந்தது. வர வரக் கறுத்து, தென்திசை இருண்டு வந்தது. அந்த மேகங்கள் ஒன்று கூடி அவனுக்கு எதிராகச் சதி செய்வதாக முருகேசன் நினைத்தான். அந்தக் கருவானம் போல் அவன் மனத்திலும் இருள் கவிந்தது. காமாட்சி மனதிற்குள் அம்பாளுக்கு நூறுகுடம் தண்ணீரில் அபிஷேகம் செய்வதாக நேர்ந்து கொண்டிருந்தாள். சிறுது நேரத்தில் ஒரு காற்று வீசியது. முகிற் கூட்டம் கலைந்து வானம் வெளுத்துக் கொண்டு வரவே முன்போல் ஆகாயம் தெளிவுடன் விளங்கியது. தன்னுடைய

பிரார்த்தனை அம்பிகைக்குக் கேட்டுவிட்ட தென்று காமாட்சி நினைத்தாள்.

முருகேசன் படுக்கப் போகுமுன் அன்றைக்கு ஐந்தாவது முறையாக கந்தையனுக்கும் கோவிந்தனுக்கும் காலையில் அறுவடை பற்றி நினைப்பூட்டிவிட்டு வந்து படுத்துக் கொண்டான். அவன் நித்திரைக்குப் போன போது நேரமாகிவிட்டது. அவன் படுக்கையிலே புரண்டு கொண்டிருந்தான். அவனுக்கு நித்திரை எப்படி வரும்? அவனுடைய மனம் விழிப்புக்கும் தூக்கத்துக்குமிடையே ஊசலாடிக் கொண்டி ருந்தது. ஆயிரமாயிரம் சிந்தனைகள் பிசாசு களைப் போல் அவன் மனசில் ஓடிக் கொண்டிருந்தன.

அவன் நெல் அறுத்துக்கொண்டு வயலிலே நிற்கிறான். பக்கத்திலே கந்தையனும் கோவிந்தனும் அவனுடன் சேர்ந்து நெல் அரிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அரிந்து வைத்ததைக் காமாட்சியும் பொன்னியும் சின்னம்மாவும் கட்டுக் கட்டாய் அடுக்கிக் கொண்டு வருகிறார்கள். கிளிகளையும் காக்கைகளையும் துரத்திக் கொண்டு திரிகிறான் ராமு. அப்பொழுது காமாட்சி 'பள்ளத்துப் பள்ளன் எங்கேடி போட்டான்' என்று பள்ளுப் பாடத் தொடங்கினாள். அதற்குப் பொன்னி 'பள்ளன் பள்ளம் பார்த்து பயிர் செய்யப் போட்டான்' என்று சொல்ல, காமு 'கொத்துங் கொண்டு கொடுவாளுங் கொண்டு.....' என்று இரண்டாம் அடியைத் தொடங்கினாள்.

அதற்குப் பொன்னி 'கோழி கூவவும் மண் வெட்டி கொண்டு' என்று சொல்ல இருவரும் சேர்ந்து 'பள்ளன் பள்ளம் பார்த்து பயிர் செய்யப் போட்டான்' என்று முடித்தார்கள்.

உடனே காமு, 'ஆளும் கூழை, அரிவாளும் கூழை' என்று தொடங்கியதும், முருகேசன் 'யாரடி கூழை?' என்று அரைத் தூக்கத்தில் இருந்து கத்திக் கொண்டு எழுந்தான்.

முருகேசன் பாவம், ஆள் கொஞ்சம் கூழை, தன்னையே அவள் கேலி பண்ணுவதாக நினைத்து இப்படிக் கோபித்துக் கொண்டான். இப்போது நித்திரை வெறி முறிந்ததும் தான் செய்ததை நினைத்து வெட்கமாயிருந்தது. தனக்குள்ளே சிரித்துக் கொண்டு திரும்பவும் படுத்துக்கொண்டான்.

அந்தக் கனவுதான் எவ்வளவு இனிமையான கனவு. அதன் மீதியையும் காணவேண்டுமென்று அவனுக்கு ஆவலாயிருந்தது. ஆனால் நித்திரை எப்படி வரப் போகிறது? கனவுதான் மீண்டும் காண முடியுமா? தன் கற்பனையில் மீதியைச் சிருஷ்டித்துப் பார்த்து அவன் மகிழ்ந்து கொண்டிருந்தான்.

பாட்டுடன் அறுவடை நடந்து கொண்டி ருக்கின்றது. வயலிலே நின்று கொண்டு நெல் மூட்டைகளை வண்டியில் ஏற்றுகிறார்கள். வண்டி வீட்டு வாசலில் வந்து நிற்கிறது. அவனுடைய களஞ்சியம் நிறைந்து பரிபூர ணமாய் விட்டது. ராமன் வயிறு நிறையப் பாற்கஞ்சி குடித்துக் கொண்டிருக்கிறான். காமு ஒட்டியாணத்துடன் வந்து அவனை.....

அப்பொழுது வீட்டுக் கூரை மேலிருந்து ஒரு சேவல் கூவியது. முருகேசனின் கற்பனை அறுந்துவிட்டது. அக்கிராமத்தில் உள்ள சேவல்கள் தொடர்ந்து ஒவ்வொன்றாகக் கூவிக்கொண்டுவந்தன. அவன் வீட்டிற்கு முன்னால் கட்டியிருந்த ஆட்டுக்குட்டி 'மேய், மேய்' என்று கத்தத் தொடங்கியது. எங்கிருந்தோ கள்ளத்தனமாய் உள்ளே நுழைந்த மெல்லிய காற்று அவன் மேல் படவே குளிரத்தொடங்கியது. முருகேசன் பரபரவென்று எழுந்து வாசலை அடைந்து வானத்தை அண்ணார்ந்து பார்த்தான்.

அவன் படுக்கைக்குப் போகும் போது வானத்திலே பூத்திருந்த நட்சத்திரங்கள் ஒன்றையும் காணவில்லை. வானம் கறுத்துக் கனத்து எதிலோ தொங்கிக் கொண்டிருப்பது போல் தோன்றியது. வீட்டு முற்றத்திலே வந்து பார்த்த போது ஒரு மழைத்துளி அவன் மேல்

வீழ்ந்தது. தொடர்ந்து பல துளிகள் விழத் தொடங்கின. அவன் தலைமேல் வானமே இடிந்து வீழ்வது போல் உணர்ந்தான்.

உக்கிப்போய் தன் வீட்டுத் திண்ணையிலேயே அவன் குந்திக் கொண்டான். பொலு பொலு வென்று மழை தொடங்கியது. இடி இடித்தது- மின்னலுடன் மழை சோனாவாரியாய்க் கொண்டிருந்தது.

காலை எட்டு மணியாகியும் மழை ஓயவில்லை. ராமு ஓடிவந்து தந்தைக்குப் பக்கத்திலே குளிர்காய்ந்து கொண்டிருந்தான். காமாட்சி கற்சிலை போலானாள். மழையுடன் காற்றும் கலந்து 'ஹோ'வென்று இரைந்து கொண்டிருந்தது.

'அம்மா இன்னிக்கிப் பாற்கஞ்சி தர்ரதாய்ச் சொன்னியே!. பொய்யாம்மா சொன்னாய்' என்று தாயைப் பார்த்துக் கேட்டான் ராமு.

காமாட்சிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவள் வயிறு பற்றி எரிந்தது. பச்சைக் குழந்தையை எத்தனை நாள்களாய் ஏமாற்றி வந்தாள். மழையும் பாராமல் எதிர் வீட்டுக்கு ஓடினாள். கால்படி அரிசி கடனாக வாங்கிக் கொண்டு வந்தாள்.

முருகேசன் ஒன்றும் பேசாமல் வானத்தைப் பார்த்தபடி இருந்தான். அவனுடைய பார்வை வயல் வெளியையும் ஊடுருவிச் சென்று எங்கோ லயித்துப் போயிருந்தது.

வெள்ள வாய்க்காலிலே தண்ணீர் கரை புரண்டு ஓடிக்கொண்டிருக்கிறது. இப்பொழுது குளம் நிறைந்து பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கும். எங்கள் நெற்பயிர்கள் கீழே விழ்ந்து உருக்குலைந்துவிட்டன. நெல்மணிகள் உதிர்ந்து வெள்ளத்தில் அள்ளுண்டு போய்க்கொண்டிருக்கின்றன....

காமாட்சி களஞ்சிய அறைக்குப் போனாள். அறை வெறுமனே கிடந்தது. அவளுக்கு அழுகை விம்மிக் கொண்டு வந்தது. அங்கே நிற்கவும் தாங்காமல் வெளியே வந்தாள். ராமு, 'நாளைக்கும் தாரியாம்மா பாற்கஞ்சி' என்று தாயைப் பார்த்துக் கெஞ்சினான். அவன் கஞ்சி குடித்த கோப்பை முன்னே காலியாய்க் கிடந்தது.

அநேக நாட் பழக்கத்திலே 'நாளைக்கு..' என்று மட்டும் அவளால் சொல்ல முடிந்தது. அந்த அரைகுறையான வார்த்தை முருகேசன் வயிற்றிலே நெருப்பை அள்ளிக் கொட்டியது. மழை தொடர்ந்து பெய்தவண்ணமிருந்தது.


## மயானத்தைக் கண்டு பயம் எதற்கு?

ஒரு பெண்மணி பகவான் ரமணரைத் தரிசனம் பண்ண வருவது வழக்கம். சில நாள்களாக அந்தப் பெண்மணி வரவில்லை. பிறகு ஒரு நாள் பகவானைத் தரிசனம் பண்ண வந்தார்.
"நீ ஏன் சில நாள்களாகத் தரிசனம் பண்ண வரவில்லை?" என்று பகவான் கேட்டார்.
"நான் இப்போது புதிய இடத்துக்குச் சென்றுவிட்டேன். அங்கிருந்து வரும் வழியில் ஒரு மயான பூமி இருக்கிறது. அந்த மயானம் வழியாக வரும்போது எனக்கு அச்சமாக இருக்கிறது" என்று அந்தப் பெண்மணி பதிலளித்தாள்.
அதற்கு பகவான், "உயிருடன் இருக்கிற மனிதர்களைப் பார்த்துத்தான் பயப்படவேண்டும். உயிர் அற்றவர்களைப் பார்த்து ஏன் அச்சப்படவேண்டும்? ஜீவன் அற்றவர் உன்னிடம் வம்பு செய்யமாட்டார்கள். கொள்ளை அடிக்க மாட்டார்கள். எனவே நீ அந்த இடத்தைக் கண்டு பயப்படக்கூடாது" என்றார்.

தகவல்: தேதியூர் பாலு     நன்றி: சக்தி

# 'நற்றுணை யாவது நமச்சி வாயவே'

இடைக்காடு சயம்பு (இலண்டன்)



மன்னர் மகேந்திர வர்மர் கொலை மாக்களைக் கூட்பிட்டு ஏவினார். 'இந்தக் குற்றவாளியை நீவிர் ஒரு படகில் ஏற்றிப் பெரிய கல்லும் வலிய கயிறுகளும் கொண்டுபோய் வழுவாமல் பிணைத்துத் தூரக் கடலில் வீசிவிடுங்கள்' என்றார். இந்த ஆணையை முன் கட்டுரையிற் பார்த்தோம். நாயனார் துணிவுடன் மகிழ்ச்சியாக ஏவலாளர்களுடன் போனார். சமண குருமாரும் கண்காணிக்க வென்று நடுக்கடல் வரை போய் 'மன்னவன் சொன்னபடி முடித்தனர்' நாயனார் நீரில் ஆழ்ந்து போவதை உறுதி செய்த பின் சமண மாக்களும் செய்வினை மாக்களும் கரைக்குத் திரும்பினர். நாயனாரோ 'எப்பரிசாயினு மாகுக ஏத்துவனெந்தையை யென்று, செப்பிய வண்தமிழ் தன்னாற் சிவனைந்தெழுத்துந் துதிப்பார்', 'சொற்றுணை வேதியன் என்னுந் தூமொழிப் பதிகம் பாடினார்.' பாடல் தோறும் 'நமச்சிவாய' என்று துதித்தார். அவர் நெஞ்சில் நிறைந்து நின்றது சிகாராய திருவைந்தெழுத்து. பாடலுக்காக 'நமச்சிவாய' நவின்றார். கரை ஏறிய பின் பாடலை மீண்டும் பாடியிருப்பார். அன்பர்கள் எழுதியிருப்பர்.

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை யாவது நமச்சி வாயவே.**

இவ்வாறே மற்றப் பாடல்களிலும் பின்வருமாறு அமைத்து உறுதிப்படுத்தினார். 'நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே, பாவத்தை அறுப்பது நமச்சிவாயவே, நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே, நங்களுக் கருங்கலம் நமச்சிவாயவே, நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே, நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே, நல்லக விளக்கது நமச்சிவாயவே,' ஒரு குறிப்பு நல்லக விளக்கு- அக விளக்கு- நாயனாரின் நெஞ்சில் நிறையவே நிறைந்திருக்கும் சிகாராய திருவைந்தெழுத்து, 'நன்னெறியாவது நமச்சிவாயவே,'. பத்தாவது பாடலுக்கு வருகிறோம் இந்தப் பாடலிலே ஒரு எதிர்பாராத சிறப்பு உண்டு. பதிகத்தின் பயனைச் சொல்லியிருக்கிறார். வேறு பதிகங்களில் நாயனார் திருக்கடைக் காப்பு என்றும் பயனென்றும் பாடியதில்லை. காரைக் காலம்மையார் பாடினார். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடினார். திருநாவுக்கரசு நாயனாரோ இதுவரை திருக்கடைக்காப்பு பாடவில்லை. இதன் பின்னும் பாடவில்லை. இப்பதிகத்தில் தெய்வீகச் சிறப்பு இருக்கிறது. அன்பர்கள் நம்பிக்கையுடன் ஓதுவார்களாக.

**மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்**
**பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ**
**நாப்பிணை தழுவிய நமச்சி வாயப் பத்து**
**ஏத்தவல் லார்தமக்கு இடுக்க ணில்லையே**

சேக்கிழார் 'ஏத்துவன் எந்தையை யென்று... சிவன் அஞ்செழுத்தும் துதிப்பார்' என்று கூறினார். அஞ்செழுத்து சிவன் உள்ளடக்கிய மகாமந்திரம். 'ஆதி மந்திர மஞ்செழுத்து'. சூக்கும் மந்திரம். சிவனை அடைவிக்கவல்ல, சிவனருளைத் தேடித்தரவல்ல அஞ்செழுத்து. திருவைந்தெழுத்தை ஓதும் முறைகளும் பயன்களும் வெவ்வேறாகும். என்று அறிஞர் சொல்வார்கள். இவை தகுந்த ஞானாசிரியரிடம் அறிய வேண்டியவை. இங்கு நாயனார் ஓதித் துதித்தது -சொல்லித் துதித்தது 'நமச்சிவாய' எனும் மனத்திலிருந்து நீங்காத சிகாராய சூக்கும மந்திரம். மந்திரம் ஓதும் பயன்பெறுவதற்கு அன்பு வைக்க வேண்டும். உறைப்புடன் பற்ற வேண்டும். உணர்வினில் அந்த மந்திரத்தின் உருவே பட ஒன்றி நினைக்க வேண்டும்.

**பதிகப் பாட்டுக் குறிப்பு:**

சோதி வானவன்- இருளில் வழிகாட்டி, பண்ணிய உலகினிற் பயின்ற பாவம் -முன் வினையுடன் இப்போ செய்யும் வினை

அருங்கலம் - பாடல் (2) இரண்டில்- பயன் பலவற்றுள்ளுஞ் சிறந்தது

பாடல் (5) ஐந்தில்- வேண்டப்படுவது

குலம்- சாதி, குலம் ஆச்சிரமம், (பிரம்மச்சாரி, சந்நியாசி முதலிய படிகள்)

அடிமைக்குலம்- (சரியை, கிரியை, நிலைகளில் நிற்கும் தொண்டர்)

சைவர் எல்லோரையும் உளப்படுத்தி 'நங்களுக்கு நமச்சிவாய அருங்கலம்' என்ற கூறியமை சிறப்பு.

பாடல் (8) விளக்கு - சிறப்பாக அகப் பூசையை வலியுறுத்துகிறார்

'வீடினார் உலகினில், உருவம் காண்டல்' 'ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வொரு பொருளைக் குறித்தலின், அதனதன் உருவந்தெரிந்து கணித்தல் வேண்டும்.' 'உருவாய்த் தெரிந்து உந்தன் நாமம் பயின்றேன்', பயின்ற நாமம் 'சிவாய நம என்று நீறணிந்தேன்' என்று பின்னால் நாயனார் கூறுவார். (பாதிரிப் புலியூர்)

நாடிற்று - சிவகதி தரக் கருதிற்று

பலரும் காண்பது - பலரும் - எல்லாச் சமயத்தவரும், காண்பது-தம்மை அறியாமலே காண நிற்பது. ய.ந.ம மூன்றில் மற்றெல்லாச் சமயங்களும் அடங்கிவிடுகின்றன.

சி.வ. இரண்டும் சைவத்திற்கே உரிய தனிச் சிறப்புடையன.

அன்பர்களே! தயவு செய்து தேவாரப்புத்தகத்தை வைத்துக் கொண்டு இந்த உரைக் குறிப்புகளைப் பாருங்கள்.

நாயனார் ஐந்தெழுத்தோதியே பதிகம் பாடினார். கல் மிதந்தது. நாயனார் கட்டுகளினின்றும் விடுபட்டு ஐந்தெழுத்தின் உருவமாகவே விளங்கித் தோன்றினார். ஒளி பரவும் உடலும் கடல்மணம் போய் நறுமணம் வீசும் இதமும் தோன்ற இருந்தார். தெப்பத்திலிருந்து செலுத்துவது போல் அசைந்து கரை நோக்கி வந்தார். நாயனாரைத் தாங்கிக் கரை சேர்க்க வருணன் தவஞ் செய்திருந்தான் என்று சுவைபடச் சேக்கிழார் கூறுகிறார். கருணை நாவரசு என்றும் சேக்கிழார் குறிக்கிறார். நாயனார் நாவன்மை பெற்றவரல்லவா? சொன்ன சொல் பலிக்கும் ஆற்றல். ஆனாலும் இங்கு சமணர்களைக் குற்றம் சொல்லவோ சபிக்கவோ இல்லை. ஐந்தெழுத்தையே ஓதினார். நாயனார் கரை சேர்ந்ததும் அங்கு குழுமிய அடியவர்களின் அரகர ஒலியும், கடலின் ஒலியும் ஓங்கின. நாயனார் கரையேறிய இடம் 'கரையேற விட்ட குப்பம்' என்று இன்றும்

அழைக்கப்படுகிறது. 'கரையேறிய விழா' என்று பாதிரிப் புலியூர்க் கோயிலில் விழாவும் கிரமமாக நடக்கிறது. இவை இந்த அற்புதத்துக்குச் சான்றுகள். நாயனார் அடியவர்கள், குழுமிநின்றோருடன் கோயிலுக்குச் சென்றார். கோபுரம், வீதி கோயில் ஆகியவற்றை வணங்கிக் கொண்டு உட்புகுந்தார். 'ஈன்றாளுமாய்' என்று தொடங்கும் பதிகம் பாடினார். 'அருள் நெறி விளங்கப் பாடினார்.' என்று சேக்கிழார் அறிவிக்கிறார். சைவசித்தாந்தம் விளங்கப் பாடினார் என்பதுதான் கருத்து, முதலாவது பாடலில் 'ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய், உடன் தோன்றினராய்' என்று தாய், தந்தை உடன் பிறந்தாரை நினைந்து போற்றினார். அடுத்து 'மூன்றாயுலகம் படைத்துகந்தான்' என்று 'அவன் அவள் அது' என்ற சிந்தாந்தக் கருத்தைக் கூறினார். பின் இறைவர் தன் மனத்திலே புகுந்து கொண்டதையும் தன்னைத் தொண்டன் ஆக ஏற்றுக் கொண்டதையுங் குறிக்கிறார். முடிவாக இறைவர் தனக்குத் தோன்றாத் துணையாக இருப்பதையிட்டுப் பயமின்றி மகிழ்ச்சியாய் இருப்பதைக் குறிக்கிறார். இரண்டாவது பாடலில் இயற்கை அபாயங்கள் ஏற்பட்டாலும் இறைவர் கழலே புகல்; அதனால் பயமில்லை என்றார். மூன்றாவது பாடலில் இறைவர் விரும்பி என் உள்ளத்தில் புகுந்திருக்கிறார். இனி அவலமில்லை; மரணமில்லை. கடல் நடுவே திருநாமத்தின் உருவத்தை உள்ளே கண்டு உணர்ந்து இருந்த குறிப்பு. நான்காவது பாடலில் 'இறைவர் என் சிந்தையில் குடியிருப்பதால் மாயையகன்று ஆணவ மலமும் முழுமையாய்த் தேய்ந்துவிட்டது.' என்று கூறுகிறார். ஐந்தாவது ஆறாவது பாடல்களில் சூக்கும திருவைந்தெழுத்தை அமைத்துப் பாடியிருக்கிறார். ஒன்றியிருந்து தியானம் பண்ணுவதை அறிவுறுத்துகிறார். கருவிலேயே இறைவரை நினைந்து காதல் கொண்டிருந்ததாகச் சொல்கிறார். பின் தமக்கையார் மந்திரமோதி நீறணியக் கொடுத்த செய்தியையும் சொல்கிறார்.

குறிப்பு: எந்த உயிரும் கருவிலே இறைவர் நினைவுடனே இருக்கும் என்ற நம்பிக்கை உண்டு. அதனால் தான் கருவிலே உயிர்களைக் கொல்லுவது மகா பாவமென்று கொள்ளப்படுகிறது. நாயனார் இந்தப் பாடலிலே தனக்கு முத்திப் பேறு தரும் படியும் வேண்டிக் கொள்கிறார். ஐந்தாவது ஆறாவது பாடல்களைப் பற்றிய ஒரு சிறந்த கருத்து பின் கூறுகிறேன். 'உருவாய்த் தெரிந்து உன்தன் நாமம் பயின்றேன்.' என்றார் நாயனார். மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஒரு உருவத்தைக் குறிக்கின்றது. அந்த உருவங்களைக் கண்டு தியானம் பண்ண வேண்டும். அவை சிவன், அருள்சக்தி, உயிர், மறைப்புச் சக்தி, மலம் ஆகும். ஏழாவது பாடலில் அறக்கருணை மறக்கருணை என்ற இறைவரின் இரண்டு குணங்களுக்கும் உதாரணங் கூறுகிறார். எட்டாவது பாடல் நாம் வழிபாட்டில் நாளும் கேட்க வேண்டிய வரத்தை ஞாபகப்படுத்துகிறார். எப்பிறவி பிறந்தாலும் இறைவரை மறக்கக்கூடாது என்ற வரம் அது. ஒன்பதாவது பாடலில் பிரளயத்தைக் குறிப்பிட்டு 'நாம் இறைவர் திருவடிகளையே பற்றிக் கொண்டோம். அஞ்சுவதேன்.' என்று உறுதி கூறுகிறார். பத்தாவது பாடலில் திருந்தாச் சமணர் என்றார். அடுத்தடுத்து ஏற்பட்ட தோல்விகளையும் கண்டும் பழி சாதிக்கும் எண்ணம் மாறாத சமணரின் தீய குணத்தைக் குறித்தார். இனிப் பிறவாத வரத்தைம் கேட்டார். இந்தப் பத்துப் பாடல்களும் சைவ சித்தாந்தக் கருத்துக்களையே கொண்டவையாகும். இன்னுமொரு அற்புதத் தெய்வீகச் சிறப்பு இப் பதிகத்தில் உண்டு. வேதத்தில் திரு உருத்திரத்தின் நடுவில் அதிசூக்கும மந்திரம் அமைந்திருப்பதாக அறிஞர் சொல்வார்கள். அதுபோலவே எமது திருமுறைகளிலும் பல இடங்களில் பாடல்கள் இந்த மாதிரி அமைந்திருப் தைக் காணலாம். இப்பதிகத்தின் ஐந்தாவது ஆறாவது பாடல்கள் பதிகத்தின் நடுவில் இருக்கின்றன. இந்த இரண்டு பாடல்களிலும் சூக்கும் திருவைந்தெழுத்து அமைந்திருக்கின்றது. ஒவ்வொரு நாளும் பாராயணம் பண்ண உகந்த பதிகம் அல்லவா? ஓதி உய்வோமாக. நாயனார் திருப்பாதிரிப் புலியூரில் சில நாள்கள் தங்கியிருந்து தொண்டுகள் செய்து திருவதிகை வீரட்டானத்துக்குப் புறப்பட்டார்.

திருச்சிற்றம்பலம்

# ஆன்மாவின் பரிணாம வளர்ச்சியைக் கூறுவது திருவாசகம்

திருமதி. அன்னலிங்கம்

திருவாதவூரர் மதுரைப் பக்கலிலுள்ள திருவாதவூரிலே பிறந்தார். இவரின் கல்வி, ஒழுக்கம், ஆற்றல் என்பவற்றைக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் அவரை முதலமைச்சராக நியமித்தான். அவரது திறமைகளுக்குப் பரிசாக தென்னவன் பிரமராயன் எனும் பட்டத்தையும் வழங்கினான். அரசாங்கத்தை திறம்பட நடத்திய போதிலும் அவர் சிவபக்தியிலும் சிறந்து விளங்கினார். சோழநாட்டுக் கடற்கரையில் நல்ல குதிரைகள் விற்பனைக்கு வந்ததை அறிந்த அரசன் குதிரை களை வாங்கும்படி பணம் கொடுத்து அனுப்பினான். போகும் வழியில் திருப்பெருந்துறையின்கண் சிவனே ஞானாசாரியராக வந்து திருவாதவூரருக்கு ஞானோபதேசம் செய்தருளினார். வாதவூரர் திருப்பெருந்துறையில் கோயில் கட்டிப் பணத்தைச் சிவ சேவையில் செலவழித்துவிட்டார். இதனை அறிந்த மன்னன் திருவாதவூரரை அழைத்துப் பல தண்டனைகளை வழங்கினான்.

சிவபெருமான் பாண்டிய மன்னனுக்கு பாடம் புகட்டி, பக்தி ஊட்டவும், திருவாதவூரரைத் துறவி ஆக்கி பக்தி ஞானப்பணியை உலகுக்குச் செய்யவும் திருவுளம் கொண்டார். நரியைப் பரியாக்கியும், குதிரைச்சேவகனாக வந்தும், வைகை நதிக்கரை அடைக்க மண் சுமந்து அடிபட்டும், அதிசயங்களைச் செய்து அருள் புரிந்தார். பாண்டிய மன்னன் பிழையை உணர்ந்தான், வருத்தமடைந்தான். திருவாதவூரரை அணுகி, ஈசன் எல்லாம் வல்லவர், பக்தர்களுக்கு எளியன். நல்லோனாகிய உமது இணக்கத்தினால் நானும் சிவபக்தனானேன். யான் உமக்குச் செய்வது யாதோ என விண்ணப்பித்தான். திருவாதவூரர் துறவு பூண்டு வெளியே செல்ல விருப்பம் என்றார். அரசனும் அன்போடு ஆதரவளித்து அனுப்பி வைத்தான். திருவாதவூரர் சிவநெறி செல்வதற்குக் கிடைத்த திருவருளை நினைந்து வியந்தார். மான் கூட்டத்தைப் பிரிந்தமான் போல் விரைந்து திருப்பெருந்துறைக்கு ஓடிச் சென்றார்.

அங்கு குருநாதரும் அடியார் கூட்டமும் குருந்த மரத்தடியில் இருக்கக் கண்டார். அளவிலா ஆனந்தம் கொண்டார். குருநாதரின் திருவடியைப் பற்றினார். சிஷ்யனான வாதவூரர் முற்றிலும் பரிபக்குவமடைந்த பின் அந்தணனாக வந்து ஆட்கொண்ட சிவனார் மறைந்தார். அடியார் கூட்டமும் மறைந்தது. ஈசனைக் கண்ணாரக் கண்டு ஆனந்தத்தில் மூழ்கி அகம் மகிழ்ந்திருந்த திருவாதவூரருக்குப் பிரிவுத் துன்பம் ஏற்பட்டது. அவரது பிரிவுத்துன்பம் சாதாரண பிரிவுத்துன்பமா? துன்பம் தாழாது கவலையில் ஆழ்ந்தார், திகைத்தார், அலமந்தார். திருவாதவூரருக்கோ இறைவன் திருவடியைத் தினைத்துணை நேரமும் பிரிய மனமில்லை. இனிப் புறம்போகேன். புறம் போக ஒட்டேன் என்று நினைத்தார். பல கோயில்களுக்கும் சென்றார். பரமசிவத்தின் திருவடிகளை நினைந்து நினைந்து உருகினார். அழுதார். அல்லல் நீக்கி ஆனந்தம் அடையத் திருவாசகக் கவிதைகளை இயற்றி அருளினார். மாணிக்கவாசகர் ஆனார்.

திருவாசகம் ஞானப் பொக்கிஷம். திருவாசகத்தேன் நெஞ்சை உருக்கவல்லது. கல் நெஞ்சையும் நெகிழ வைக்க வல்லது. அகஇருளைப் போக்கவல்லது. பிறவிப்பிணியை வேரறுக்க வல்லது. சொல்லழகும் பொருள் அழகும் நிறைந்த தமிழ் மறை.

மாணிக்கவாசகர் தன்னைத் தாழ்த்தி இறைவனை முன்னிலைப்படுத்தி அன்பால் உருகி அழுது அழுது பாடுகிறார். உன் அன்பர் உன்னைப் பெறப் பேரவா உறுகின்றனர். அத்தகையோரைக் காக்க வைத்துவிட்டு எளியனாகிய என்னை ஆட்கொண்டாய். அவர்களைப் போல் உன் பேரன்பைப் பெறுவதற்கு என் சிறு நெஞ்சம் போதாது. உள்ளங்கால் முதல் உச்சிவரை நான்

நெஞ்சாகி உருகவேண்டும். எனக்கு அழுவதற்கு இரண்டு கண் போதாது. உடம்பெல்லாம் கண்ணாய் அவைகளினின்று கண்ணீர் வெள்ளமாய் ஓடவேண்டும். ஆனால் என் நெஞ்சோ உருகாதிருக்கிறது. கண்கள் இரண்டும் மரக்கட்டையில் செய்த கண்கள் போல் இருக்கின்றன. என் வினை அவ்வளவு கொடியது என்கிறார். சிவனுக்கு அடிமையாக உடமையாக வாழாது கழிந்த நாள்களை நினைந்து இரங்குகிறார். தன்னைத்தன் உடமை என்று ஏற்பாரா? தள்ளி விடுவாரா? பழைய அடியார் நின்பால் வந்தார் நானும் நோயும் புறமே போந்தோம். உனைப் பிரிந்தும் சாகாமல் இருக்கிறேன். "யாமாறும் திருவடிக்கே அகம் குழையேன் பாடேன் ஆடேன் அலறேன் ஆவிசோரேன் அன்புருகேன் நைந்துருகேன் தரியேன் சாவேன் தீயில் புக்கிலேன்" என்று புலம்புகிறார். நாயேன் எனப் பல தடவை தன்னைத் தாழ்த்துகிறார். பிழைகளை உணர்த்துகிறார். தன்னை ஊர்நாய் ஊர்ப்பன்றி என்று கீழோனாக்குகிறார். மாணிக்கவாசகரின் வாழ்க்கை அப்படி அமைந்து இருக்கும் என்று எண்ண இடமில்லை எனினும் மக்கள் உணரும் நல்வழிச் செல்லும் பொருட்டுக் கூறுகிறார் என்றே எண்ண வேண்டும்.

ஐம்புலன் வழிச் சென்று மக்கள் மனம் அடங்காது தீவினையைச் செய்கின்றனர். மனக்குரங்கை அடக்குவது இலகுவான காரியமா? மாணிக்கர் நெய்க்குடத்தில் எறும்பு மொய்ப்பது போல் ஐம்புலன் வழியே உனைப் போகவிடேன். மண்ணுனிப்புழுவை எறும்புகள் அரிப்பது போல் ஐம்புலன்களால் அரிப்புண்ணுகிறேன். யானை சிறு செடியில் சிக்கி அழிவது போல் ஐம்புலன்களால் அழிகிறேன். குளத்தில் நீர் வற்றச் சிறு மீன்கள் துவள்வது போல் துடித்து அஞ்சுகிறேன் என்று இரங்கி நிற்கிறார். கண்ணப்பரின் பக்தியை வியக்கின்றார். "ஒருமையுள் ஆமை போல் ஐந்தடக்கல் ஆற்றல் எழுமையும் ஏமாப்புடைத்து".

இப்பூவுலகோ நல்லதும் கெட்டதும் அடங்கியுள்ளது. நல்லதையே செய்து பழக வேண்டும். இளமை தொட்டே இறைவனிடம் பக்திபூணல், நல்லொழுக்கம், நற்பழக்கங்களை மேற்கொள்ளல் என்பன வாழ்க்கையை மேம்படுத்தும். இறைவன் அன்பு வலையில் அகப்படுவான். பரமசிவம் ஆன்மாக்களுக்குத் தனித்துணையாக இருப்பது, துணையாக இருந்து துறப்பிப்பது. ஆணவம் அடங்கிய அன்பினில் விளைவதே சிவபோகம். "பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கிய" எனக்குச் "செம்மையேயாய சிவபதமளித்த செல்வமே" எனப் பாடுகிறார் மாணிக்கர்.

மாணிக்கவாசகருக்கு எவ்வளவோ துன்பங்கள் நேர்ந்த போதிலும் அவர் கலங்க வில்லை, அஞ்ச வில்லை. ஈசன் திருவடியிலேயே திளைத்திருந்தார். இறைவனும் அவருக்குக் காட்சி அளித்தார். "கணக்கிலாத் திருக்கோலம் காட்டினாய்" எனக் கூறுகிறார்.

ஆன்மாக்கள் சிறந்த பயனைப் பெற நல்லோரிணக்கம் (சத்சங்கம்) வேண்டும். மாணிக்கவாசகர் பழ அடியாரோடும் கூடி வாழ விரும்புகிறார். பழுத்த மனம் நிறைந்த அடியார்களே பழஅடியார். அடியார் கூட்டத்தைப் பிரிந்ததும் பெருங்கவலை. இறைவனுக்கு அடிமையாகிவிட்டால் "என்ன குறையுமிலோம்" என்று எண்ணுகிறார்.

இறைவனிடத்துச் சிறுமைகள் போன்று தெரிவது உண்மையில் அவனது மகிமைகள். மாணிக்கவாசகர் நிந்திப்பது போல் துதி செய்கிறார். உனைப் பிரிந்த நான் இருதலைக் கொள்ளி எறும்பு போல் தவிக்கிறேன். நீ என்னைப் பிழை செய்தவனென்று ஏற்காது கைவிடுவாயில் யானைத்தோல் போர்த்த பித்தன். புலித்தோல் உடுத்த பித்தன். நஞ்சுண்ட பித்தன். தீயில் விளையாடும் பித்தன். என்னை ஆண்டு கொண்டு புறக்கணித்த பித்தன். இப்படியெல்லாம்

தொடர்ச்சி 18 பக்கம்

# IDLY DOSA

**South Indian, Srilankan & Chinese Restaurant**

*We are bringing traditional food from india and Sri Lanka with a new look to tickle those taste buds*



**OPENING TIMES**
**10.00 AM - 11.00 PM**

**41, PERTH ROAD,**
**GANTS HILL, ESSEX**
**IG2 6BX**
**020 8554 5777**

**Specialised in Catering Service for**

**Birthday Parties**
**Wedding**
**Office Parties**
**& Onsite Dosa**

**Free Delivery**
minium order above £15
within 2 mile radius

Payment by:
Cash or Credit cards / Debit card

VISA

All dishes are subject to availability

உனைப் பழிப்புக்கு ஆளாக்குவேன். சிரிப்பிப்பேன் என்று நிந்தாஸ்துதியாகப் பாடுகிறார். நான் வாழ்த்தினாலும் வைதாலும் என் குற்றத்தின் பொருட்டு வருந்துகிற என்னைத் தள்ளிவிடாதே என்கிறார்.

சிவன் மும்மூர்த்திகளுக்கும் முன்னவன், சித்ஆகாசன், அப்பன், அமுதன், இனியன், அகிலாண்டத்துக்கும் அவனே ஈசன் என்ற மூர்த்தி, விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் ஒப்ப முடிந்தது. பரம்போருளே அவன் என்பதை அவனது நெற்றிக்கண் (ஞானக்கண்) நிருபிக்கிறது. அத்தகைய பரம் பொருள் பக்தன் பொருட்டு மதுரையில் கூலிக்கு மண் சுமந்தார். அடிபட்டுப் புண் சுமந்த மேனியரானார். அப்பரம்பொருளைப் புகழ்ந்தும், அவர் பக்தர்களின் தோழன் பக்தர்களைக் காக்க வேண்டி கீழிறங்கி வந்தவன் கருணையையும் புகழ்ந்து, "தீதிலா நன்மைத் திரு அருட் குன்றே சோதியே உருவமே அருவமே பந்தமறுக்கும் ஆனந்தக்கடலே" என்றும் பாடுகிறார்.

மாணிக்கர் தனக்குப் புகழ் தேவையன்று, செல்வம் தேவையன்று அருளே வேண்டும் என்கிறார். குற்றங்களை உணர்ந்து திருந்தும் வேட்கையில் அழுது அழுது பாடுகிறார். உன்னருளை நாடி அழுவதைத்தவிர வேறு நான் என்ன செய்யமுடியும். இறைவா நீயும் இறைவியும் ஒன்று. நான் இறைவியால் ஆக்கப்பெற்றவன். ஆகவே நானும் சிவசக்தியும் ஒன்று. இனி நானும் உன் அன்பர்களும் ஒன்றாகும்படி அருள் புரிவாயாக என்று இறைவன் புகழ் பாடி, அருளைப் பெற்று ஆனந்தத்தில் திளைத்து பேரானந்தப் பெருநிலை அடைந்தார். சிதம்பரத்தில் நடராசப் பெருமானோடு இரண்டறக் கலந்தார். சித்ஆகாசம் (சிதம்பரஇரகசியம்).

நான் எனும் செருக்கு அன்புக்குப் பகை. நாமும் மனம் போனவழி நடந்து செருக்கு மேலீட்டால் குற்றங்களைச் செய்யாதிருப்போம். மனம், வாக்கு, காயம் ஒப்ப நல்லவற்றையே செய்வோம். செய்த குற்றங்களை உணர்ந்து இறைவனை நினைந்து அழுது வழிபடுவோம். மன அழுக்குகளை அகற்றுவோம்.

பக்தி வலையிற் படுவோனை எந்நேரமும் அன்போடு நினைந்துருகி ஆராதித்து வணங்கி மனத்தினுள் சிக்க வைப்போம். இறைவன் மனத்துள் அகப்பட்டுவிடுவானாயின் செருக்கு அடங்கும், ஆசை அகலும், 'நான்' கெட்டு விடும். இறைவன் சாகாதவன் மூப்பற்றவன். பிறவா யாக்கைப் பெரியோன். கருணாகரன். அவனை இறுகப்பற்றினால் ஓடிவருவான். எம் வினை அறுப்பான்.

பொய்யைத் தவிர்த்தல், நான் என்பதை இழத்தல், மெய்யன்பு பூண்டொழுகுதல், தொண்டு செய்தல் ஆகியவற்றை மேற்கொண்டு ஒழுகினால் இறைவன் திருவருள் சித்திக்கும். ஆன்ம ஈடேற்றமடைய நெறிப்படுத்துவதே திருவாசகம். திருவாசகத்தை நாளும் ஓதுவோம். எம் மனதைத் திருத்துவோம். இறைபுகழ் பாடிப் பரவுவோம். ஐந்தொழில் இயற்றும் பரம்பொருள் திருவடியை அன்பினாலும், தொண்டினாலும் அடைவோம். நாளும் திருவாசகத்தை ஓதிச் சிவஞானம் பெற்று உய்வோம்.

"போற்றி யாமுய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்".

திருச்சிற்றம்பலம்

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

## அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட தினங்கள்

## ஏப்பிரல் (15-04-2010) தொடக்கம் யூலை (15-07-2010) வரை

| | | | |
|---|---|---|---|
| 16-04-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | நமிநந்தி அடிகள் |
| 23-04-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் |
| 30-04-2020 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | ஏயர்கோன் கலிக்காமநாயனார் |
| 07-05-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | திருமூலநாயனார் |
| 08-05-2010 | சனி | திருநாவுக்கரசு நாயனார் | குருபூசை |
| 14-05-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | தண்டியடிகள் நாயனார் |
| 21-05-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | மூர்க்கநாயனார் |
| 28-05-2010 | வெள்ளி | சேக்கிழார் குருபூசை | |
| 28-05-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | சோமாசிமாறநாயனார் |
| 29-05-2010 | சனி | திருஞானசம்பந்தர் குருபூசை | |
| 04-06-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | சாக்கியநாயனார் |
| 11-06-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | சிறப்புலி நாயனார் |
| 18-06-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | சிறுத்தொண்டநாயனார் |
| 25-06-2010 | வெள்ளி | பெரியபுராணச் சொற்பொழிவு | சேரமான்பெருமாள் நாயனார் |
| 29-06-2010 | செவ்வாய் | ஆனித்திருவோணம் ஆலய வருடாபிஷேகம் (கும்பாபிஷேகதினம்) | |
| 14-07-2010 | புதன் | மாணிக்கவாசகர் சுவாமிகள் | குருபூசை |

**10-06-2010 வியாழக்கிழமை தொடக்கம் 19-06-2010 வரை சனிக்கிழமை வரை**
**ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் வருடாந்தர அலங்கார உற்சவம்.**
**19-06-2010 அன்று சனிக்கிழமை ஆனிஉத்தர திருமஞ்சனம்**
**பகல் 11.00மணியளவில் நடைபெறும்.**

ஸ்ரீ சிவகாமசுந்தரி சுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் சந்நிதி தினமும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை சிவனடியார்களுக்காகத் திறந்திருக்கும்.

தினமும் மாலை 8மணிக்கு பூசை வழிபாடு நடைபெறும். மேலே குறிப்பிட்ட விசேட தினங்களில் அபிடேக ஆராதனை, கூட்டு வழிபாடு போன்றவை நடைபெறும். அன்பர்கள் அனைவரும் சந்நிதிக்கு வந்து வழிபாடுகளிலே கலந்து எல்லாம் வல்ல நடராசப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு சைவ முன்னேற்றச் சங்கம் அடியார்களை அன்புடன் வரவேற்கிறது.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# DON'T SIGN ANYTHING UNLESS YOU SEE THIS SIGN

INDEPENDENT FINANCIAL ADVISER

Only an Independent Financial Adviser
work for you in recommending the best life assurance,
pensions or unit trusts on the market.
To be sure you get the best deal, contact us.

Mint Financial Services Limited


Rama & Company
Independent Financial Advisers

Rama

Rama & Company is an appointed representative of MINT FINANCIAL SERVICES LIMITED,
which is authorised and regulated by the Financial Services Authority.

**3 The Orchard, Wickford, Essex, SS12 0HB. England**

Tel: (01268) 766624 Mobile: (07956) 369557 Fax: (01268) 561805
Email: rama@mintzone.com





# EELAM SHOP

உங்களுக்குத்தேவையான
இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
மரக்கறி வகைகள், கடல் உணவுகள் மற்றும்
அனைத்துப்பொருட்களையும் நியாயமான விலையிலும்
தரமான சேவையுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

020 8690 6545
07956 460 392

399 Lewisham High Street
Lewisham, London, SE13 6NZ


# எவரஸ்ட்

## Curry King

அசத்தலான சகல உணவு வகைகளுக்கும்

24, Loampit Hill, Lewisham SE13 7SW

**Tel : 020 8691 2233**

BREAKFAST | LUNCH | DINNER

# சிவஸ்ரீ சுவாமிரத்ன சர்மா சுந்தரேசக் குருக்கள்



யாழ்ப்பாணத்தில் தாவடி என்ற ஊரிலே சிவஸ்ரீ சுவாமிரத்ன சர்மா, ஸ்ரீமதி திரிபுரேஸ்வரி தம்பதியினருக்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்தவர் குருக்கள் அவர்கள். சிறு வயதிலேயே ஆலயப் பணிகளில் ஆர்வம் மிக்கவராய் இருந்ததால் பூசை முறைகளை முறையாகக் கற்றார். தாவடி அம்பலவாண வேதவிநாயகர் ஆலயம், கொக்குவில் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம், நெல்லூரு பதி ஆகிய கோயில்களில் தம் சிவாசாரியப் பணிகளை செய்தார். பின்னர் வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோயிலில் பிரதமகுருவாக சேவை செய்துவந்தார். 1996இல் ஐக்கிய இராய்ச்சியத்துக்கு வந்து ஹைகேட் முருகன் கோயில், டூட்டிங் முத்துமாரியம்மன் கோயில் ஆகிய கோயில்களில் சிவாசாரியராகப் பணிபுரிந்தார். பின்னர் இங்கிலாந்தின் தெற்குப் பகுதியில் உள்ள 'குரோலி' என்ற இடத்தில் சொர்ணகாமாட்சி கோயிலில் பிரதம குருவாக தன் இறுதி நாள்கள்வரை பணியாற்றினார்.

சென்ற பெப்பிரவரி மாதம் 25ஆம் திகதி சிவபதம் அடைந்த சிவஸ்ரீ சுந்தரேசக் குருக்கள் தம் மனைவி ஸ்ரீமதி சீதாலட்சுமியையும் மூன்று புதல்விகளையும் விட்டுச் சென்றுவிட்டார். அன்னாரின் ஆன்ம சாந்திக்கு கலசம் பிரார்த்திக்கின்றது.

## தருமம் என்று ஒருபொருள் உளது

காட்டிலே வேடன் ஒருவன் போனான். புலியொன்று அவனைத் துரத்தியது. பயந்த வேடன் ஓடிப்போய் மரமொன்றில் ஏறினான். புலி கீழே காவல் இருந்தது. மரத்திலே தன்னை சிறிது ஆசுவாசப்படுத்திய வேடன் பக்கத்திலே பார்த்தான். பெரிய குரங்கு அமர்ந்திருந்தது. வேடன் பயந்தான். குரங்கு அவனுக்கு ஆறுதல் கூறி அபயம் அளித்தது. சிறிது நேரத்தில் குரங்கு கண் அயர்ந்தது.

புலி மேலே இருந்த வேடனைப் பார்த்து, "அந்தக் குரங்கைக் கீழே தள்ளினாய் என்றால் நான் உன்னைப் போகவிடுவேன்" என்றது. இரவு முழுவதும் இருந்து அல்லற்படாமல் தான் போகமுடியும் என்ற மகிழ்ச்சியில் வேடன் குரங்கைக் கீழே தள்ளிவிட்டான்.

"எனக்கு மனித மாமிசந்தான் பிடிக்கும். நீ போய் அந்த வேடனைக் கீழே தள்ளிவிடு" என்று குரங்கிடம் [illegible] கூறியது. குரங்கு "சரி" என்று சொல்விட்டு மரத்தின் மேலே ஏறியது. இதைக் கேட்டுக்கொண்டிருந்த வேடன் பயந்து நடுங்கினான்.

"நான் அபயம் கொடுத்தவரை ஆபத்தில் மாட்டிவிடும் இயல்பு எனக்கில்லை. கவலைப்படாதே!" என்று குரங்கு வேடனிடம் சொன்னது.

# ஆன்ம விடுதலை எப்போது?

கோயில் வாசலில் உள்ள பெட்டிக்கடையில் பக்திப்பழமாக உட்காந்திருப்பார் ஒருவர். அவர், 'எனக்கு ஆசையே இல்லை. பந்தங்களில் இருந்து விடுபட நினைக்கிறேன். இன்னும் அதற்கான வேளை வரவில்லை!' என்றபடியே இருப்பார். ஒருநாள்! கோயிலுக்கு வந்த சந்நியாசியிடமும் இதையே சொல்லிப் புலம்பினார் அந்த ஆசாமி. இதைக் கேட்டதும், 'நீ சரின்னு சொன்னா இப்பவே உன்னை அழைச்சிக்கிட்டுப் போயிடுறேன். என்ன சொல்றே?'. கேட்டார் சந்நியாசி.

'நானும் இதைத்தான் நினைச்சேன். ஆனா, வீட்ல விவரம் தெரியாத வயசுல புள்ளைங்க இருக்கறப்ப, எப்படி விட்டுட்டுப்போறதுன்னு தான் ஒரு யோசனை. அவங்களுக்கு கல்யாணம் காட்சின்னு ஆயிட்டா.... அப்பறம் நிம்மதியா கிளம்பிடலாம்!' என்றார் ஆசாமி. சிரித்தபடியே கிளம்பிச்சென்றார் சந்நியாசி. ஆண்டுகள் ஒடின! ஒரு நாள்.. கோயிலுக்கு வந்தார் சந்நியாசி! அதே சந்நியாசி, அதே பெட்டிக்கடை, அதே ஆசாமி! "எனக்கு ஆசையே இல்லை. பந்தங்களிலிருந்து விடுபட விரும்பறேன். ஆனா, இன்னும் அதற்கான வேளை வரலை". அதே புலம்பல்.

சந்நியாசி மெள்ள புன்னகைத்தபடி, "சரி இப்பவாவது புறப்படேன்!" என்றார். "பிள்ளைங்களுக்கு கல்யாணம் பண்ணி வச்சுட்டேன். பேரப்பிள்ளைங்களையும் கண்ணாலே பார்த்துட்டா, என் கவலை யெல்லாம் தீர்ந்துடும்!" என்று விவரித்தார் நம்ம ஆள்! சில ஆண்டுகளுக்குப் பிறகு, சந்நியாசி வந்தார். "எனக்கு ஆசையே இல்லை....." வழக்கம்போல் கேட்டது குரல்!

"இப்போதாவது வருகிறாயா?- இது சந்நியாசி. "கோட்ல கேஸ் இருக்கு. வழக்கு முடிஞ்சிட்டா வந்துடலாம்"- பதிலுரைத்தார் ஆசாமி. வழக்கமான புன்னகையுடன் கிளம்பினார் சந்நியாசி.

ஆண்டுகள் பல கழிந்தன. மீண்டு வந்தார் சந்நியாசி. ஆனால், அந்த ஆசாமியைக் காணோம். கடையில் இருந்தவர், "சாமி .... எங்க அப்பாதான் அவரு 'எல்லா பந்தங்களையும் விட்டுட்டு உங்ககூட வந்துடணும்னு சொலிக்கிட்டே இருந்தாரு. போன வருஷம் ஒரு நாள்... நெஞ்சு வலின்னவரு, பொட்டுனு போயிட்டாரு. அப்பா இந்நேரம் உயிரோட இருந்திந்தா, நிச்சயம் உங்ககூட வந்துருப்பாரு சாமீ...." கவலையுடன் சொன்னார் நம்மவரின் மகன்.

இதைக்கேட்ட சந்நியாசி, "உங்க அப்பன் எங்கேயும் போயிடலே. இங்கதான் இருக்கான். அதோ... அங்கே பார்... அதென்ன? அது நாய்... இங்கே தான் சுத்திக்கிட்டிருக்கு!" "அதான் உங்கப்பன். இப்பபாரு" என்றவர் கையைத்தட்டினார். அந்த நாய் வாலாட்டியபடியே ஓடிவந்தது. நாயின் தலையைத் தட்டினார்.

உடனே அது "அது எனக்கு ஆசையே இல்லை"... என பேசத் துவங்கியது.
"அடேய்.. என்னோட வந்துடறியா?" சந்நியாசி கேட்டார்.

"சாமி! ஏராளமா சொத்து சேத்து வச்சுட்டேன். பிள்ளைங்க அதை சரியா காப்பாத்துவாங்கன்னு தோணலீங்க. கடையை சரியா பூட்டாமே போயிடறாங்க. அதுதான் நாயா பிறந்து காவல் காத்துக்கிட்டு கிடக்கிறேன்!" இப்படி நாய் சொன்னதும், 'கடகட'வெனச் சிரித்தார் சந்நியாசி. பிறகு அவர் சொன்னார். அறியாமையில் சுகம் கண்டவர்களுக்கு ஆன்ம விடுதலை எப்படிக் கிடைக்கும்? இன்றைக்கு ஆலயங்களைத் தேடிப்போகிற அன்பர்கள் முதலில்... அறியாமை சுகத்திலிருந்து விடுபடவேண்டும்... பிறகு, ஆன்மிக சுகத்தை அடையாளம் காண வேண்டும்!

**-தென்கச்சி சுவாமிநாதன்**
(நன்றி: சக்தி)

# ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை
# விகிர்தி வருடப்பிற
# 14-04



ஸ்ரீசிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீசிதம்பரேஸ்வரர்



தீபாராதனை



உபயகாரருக்கு -
திரு, திருமதி சிதம்பரப்பிள்ளை
அவர்களுக்கு பிரசாதம் வழங்கல்



கைவிசேஷம் வழங்கல்

# ஸ்ரீ சிதம்பரரேஸ்வரர் சந்நிதி
# ப்பு விழா வழிபாடு
# 2010



சிறுவர் பாட்டு நிகழ்ச்சி


சிறுவர் வாத்திய இசைநிகழ்ச்சி


விழாவுக்கு வருகை புரிந்த அடியவர்கள்


சிவாசாரியாரை தலைவர் கௌரவித்தல்

# நான்பெற்ற இன்பம்......

**சைவ முன்னேற்றச் சங்கம் வெள்ளிக்கிழமை தோறும் நடத்திவரும் பெரியபுராணச் சொற்பொழிவு நிகழ்வில் செல்வி மதுரா மூர்த்தி நாயனார் பற்றிப் பேசினார். தான் பெற்ற அநுபவத்தை, தான் பெற்ற இன்பத்தை மற்றைய சிறுவர்களுடன் அவர் இங்கே பகிர்ந்து கொள்ளுகிறார்.**

"கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி". நாம் வைத்திருக்கும் நிலையற்ற செல்வங்களைவிட உண்மையான பொருள் கல்வியே! கொன்றைவேந்தனில் ஔவைப்பிராட்டியார் எமக்காக இதைக் கூறியுள்ளார். கல்வி கற்கும்போது அன்பு, ஒழுக்கம், பண்பு ஆகிய யாவற்றையும் சேர்த்துக் கற்றகவேண்டும். சமயங்கள் எமக்கு அதற்கான வழியைக் காட்டுகின்றன. அதனால் நாம் எமது சமயங்களைப் பற்றிப் படிக்கவேண்டும். பெரியோர்கள், குருமார்களின் அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நடக்கவேண்டும். அப்படி ஒரு சந்தர்ப்பம் 2010 ஜனவரி மாதம் 22ஆம் திகதி எனக்குக் கிடைத்தது.

சைவ முன்னேற்றச் சங்கத்தினர் ஸ்ரீசிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ நடராஜப்பெருமான் சந்நிதியில் 63 நாயன்மார்களின் சரித்திரங்களை வாராந்தோறும் சொற்பொழிவாக நடத்த ஏற்பாடு செய்துள்ளார்கள். அதிலே, சைவ சமயத்தில் அதிக ஈடுபாடுள்ள மாணவியான எனக்கும் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அங்கு நான் சென்றபோது, குருக்கள் ஐயா கோயில் அமைப்பு பற்றியும் பொன்னாலான கூரையின் கீழ் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பற்றியும் விளக்கிக் கூறினார். பின்பு எமக்குத் தர்ப்பை அணிவித்து அர்ச்சனையும் செய்தார். அதன் பின்பு எம்பெருமானுக்கு அபிஷேகமும் ஆராதனையும் நடந்தது. சிவாசாரியாரின் ஆசீர்வாதத்துடனும் இறைவனின் அருளுடனும் நிர்வாகத்தினர் ஒழுங்குசெய்தபடி நான் மூர்த்தி நாயனாரின் வரலாற்றையும் அவர் இறைவனுக்குச் செய்த தொண்டையும் பற்றி பேசினேன். அவர்கள் அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, திரையிலே படமாகவும் காட்டினார்கள். தமிழ் தெரியாத மாணவர்களும் எமது நாயன்மார் வரலாற்றைப் படிக்க இது உதவியாக இருந்தது.

அன்புக்குரிய திரு இராமநாதன் அவர்கள் பேசுகையில், லண்டனிலே இன்று எத்தனை கோயில்கள் இருந்தாலும் சைவ முன்னேற்றச் சங்கந்தான் நாயன்மார்கள் குருபூசை வழிபாட்டை முதன்முதல் இந்நாட்டில் ஆரம்பித்தார்கள் என்று குறிப்பிட்டார். இறைவனைப் பாடித் துதித்து எமக்காக எத்தனையோ தேவாரங்களையும் திருவாசகங்களையும் பாடி இறைவனை அடையும் வழியைக் காட்டிவைத்த நால்வரை எழுந்தருளச் செய்து அவர்களின் அருளைப் பெறுவது மிகவும் புண்ணியமாகும்.

நிறைவு நிகழ்வாக, பெரிய ஆன்மிக, சைவ சொற்பொழிவாளர்களைக் கௌரவிப்பதுபோல் மாணவியான என்னையும் பொன்னாடை போர்த்தி ஆசீர்வதித்து கௌரவித்தபோது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். எவ்வளவு பெரிய படிப்பு படித்து எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் ஒருவருடைய தாய்மொழிக்கும் சமயத்துக்கும் கிடைக்கும் பெருமைக்கு அது ஈடு இணையாகமாட்டாது.

சந்நிதியில் பாடப்பட்ட பஜனையிலிருந்து வழங்கப்பட்ட பிரசாதம் வரை எல்லாமே மிக நேர்த்தியாக இருந்தன. சிறிய கோயிலாக இருந்தாலும் மிக அமைதியாகவும் பத்தியாகவும் காணப்பட்டது. சிவாசாரியர் ஆசீர்வாதம் என்போன்ற மாணவர்களுக்குக் கிடைக்கவேண்டும். அதற்கு மாணவர்கள் வழிபாடுளிற் கலந்தும் சமய சொற்பொழிவு கேட்டும் பலன் பெறவேண்டும் என்று அன்புடன் கூறிக்கொள்ளுகிறேன். எனக்கு இச்சந்தர்ப்பத்தை அளித்த ஆலய நிர்வாகத்தினர் அனைவருக்கும் என்னுடைய அன்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"

**- மதுரா முரளிகரன்**

# என்ன தகராறு?

ஊரின் நடுவில் ஓர் ஆறு ஓடியது. அதைக் கடக்க ஒரு ஒடுங்கிய பாலம் இருந்தது. அந்தப் பாலத்தில் ஆடு ஒன்று நின்றது. எதிரே இன்னொரு ஆடு ஆற்றைக் கடப்பதற்காகப் பாலத்தின் வழியே வந்தது. இரு ஆடுகளுக்கும் யார் வழி விட்டுக்கொடுப்பது என்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. "நான்தான் முதலில் இங்கு வந்தேன். அதனால் எனக்குத்தான் முதலில் வழி" என்றது முதலாம் ஆடு. "நீ சும்மாதானே நிற்கிறாய். நான் அவசரமாகப் போகவேண்டும். என்னைப் போகவிட்டால் நீ குறைந்துபோய்விடுவாயா?" என்றது இரண்டாம் ஆடு. இரண்டு ஆடுகளும் தாமே மற்றையவரை விடப் பெரியவர், அதனால் மற்றவரே வழிவிடவேண்டும் என நினைத்தன. பல நிமிடங்களாகியும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கக் கூடாதென்றே இரு ஆடுகளும் நினைத்துக்கொண்டன. அதனால் இரு ஆடுகளுக்கும் சண்டை மூண்டது. இரு ஆடுகளும் நல்ல உடல் வலிமை உள்ளவை என்பதால் மிக நீண்ட நேரமாகச் சண்டையிட்டன. கடைசியில் இண்டும் படுகாயமுற்று களைத்துச் சோர்ந்து ஆற்றில் விழுந்து இறந்தன.

**தகர் என்றால் ஆடு. ஆறு என்றால் வழி. ஆடு காட்டிய வழி.... தகராறு.**

இரண்டு ஆடுகளும் தம்முடைய தற்பெருமைகளை ஒருபுறம் மூட்டைகட்டி வைத்துவிட்டு ஒன்று மற்றையதற்கு வழி விட்டிருந்தால் இரண்டும் உயிருடன் வீடுபோய்ச் சேர்ந்திருக்கும்.

**இன்று உலகிலே நம்மிற் பலர் இந்த ஆடுகள் காட்டிய வழியில், நமக்கிடையே உள்ள கருத்து வேற்றுமைகளை சுமுகமாகத் தீர்க்காது தகராறினாலேயே மாண்டுகொண்டும் மற்றவர்களை மாய்த்துக்கொண்டும் இருக்கிறோம்.**

**- கருத்து: ச வேதநாராயணன்.**

**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

**கலசம்**
**KALASAM**
இலவச காலாண்டிதழ்

**கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?**

இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!

பெயர் :........................................

முகவரி :........................................

........................................

........................................

........................................

Donation: £.................

Postage: £..................

Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

kalasam@hotmail.com

Postage and admin : £10 (U.K/Europe) : £ 20 (Rest of the world) (இரு வருடங்களுக்கு)


இலக்கியா
ELAKKIA
Authentic Sri Lankan Snacks & Savouries
Available in Boxes and in Bulk for Weddings
Arangetrams, Birhdays & all other Parties
Pakoda, Mixture, Murukku, Payatham Urundai, Oma-Podi, Sippi
Parithithurai-Vadai, Bhoondhi-Laddu, Rava-Laddu
New
Frozen Products
Toastable Rotti
Rolls
Veg-Samosas
Patties
Cutlets
Veg-Rolls
Veg-Patties
Veg-Cutlets
Unit-4, Walmgate Road, Perivale, Middx, UB6 7LH, UK
Tel:+44 (0)20 8799 7180, mail@.elakkia.com


RUBY'S
Catering & Events
17th Year
Srilankan & South Indian caterers for
Weddings - Birthdays - Anangetram - Pubetry Ceremony - Private Functions
Corporate Functions - Religious Functions - Community Functions
Hotels & Halls Booking
Cutleries - Crockeries - Linens - Table Clothes- Napkins
Gift boxes-Cakes
Canapes
Starters
Main course
Salads
Deserts
From sumptous buffets to elegant silver services
Acclaimed
Sri Lankan Caterers to
Hilton
Marriott
Unit-4, Walmgate road
Perivale, Middx, UB6 7LH
Tel: 020 8799 7180
Fax: 020 8799 7181
mail@rubyscatering.co.uk
www.rubyscatering.co.uk


SHARON
Importers, Wholesalers, Distributor & Retailers
Specialist in: Srilankan and Indian Products
Fresh Fruits
Vegetables
Fish
Groceries
Off Licence
Food Products
311-313 Mitcham Road, Tooting, London SW17 9JQ
T: 020 8672 9353
F: 020 8672 6353
E: sharonsfood@aol.com

# தேன் வந்து பாய்ந்தது.........



"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்"

என்ற பாரதியின் கருத்துக்கிசைய ஈழத்தில் கதியற்ற பிள்ளைகளுக்குக் கல்வியறிவை விருத்தி செய்யவென உருவானதுதான் **'ஏடு'** (AEDU - **A**ssociation for the **E**ducational **D**evelopment of the **U**nderprevileged) என்ற அமைப்பு. தமது செயற்பாடுகளுக்கு தேவையான நிதி சேர்க்கவென, **'கவின்கலை'** என்ற நுண்கலை அமைப்போடு இணைந்து ஒரு இசை நிகழ்ச்சியை ஏடு அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தார்கள். 2010ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 18ஆம் திகதி Surbiton என்ற இடத்திலுள்ள Tolworth பெண்கள் உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் இந்த நிகழ்வு நடந்தது. தமிழ் நாட்டின் தலைசிறந்த பாடகர்களுள் ஒருவரான திரு சஞ்சை சுப்ர மணியன் அவர்களின் கச்சேரி அது. அவருக்குப் பக்கவாத்தியமாக திரு எஸ் வரதராஜன் அவர்களும் திரு நெய்வேலி வெங்கடேஷ் அவர்களும் திரு ஆர் என் பிரகாஷ் அவர்களும் அமைந்திருந்தார்கள்.

நவராகமாலிகை வர்ணத்துடன் கச்சேரி ஆரம்பமானது. அதில் இரண்டாவதாக வரும் சங்கராபரண இராகத்தில் திரு சஞ்சை அவர்கள் பாடிய இரு சங்கதிகள், ஒரு அருமையான கச்சேரி வருகிறது; பராக்! பராக்! என்று கட்டியம் கூறின. தொடர்ந்து நாட்டையில் 'சுவாமி நாத பரிபாலய' விறுவிறுப்பாக வந்தது. கரஹரப்ரியா அடுத்து வந்தது. நாதஸ்வரத்தில் ஒரு இராகம் எப்படி வருமோ அதுபோல சஞ்சை அவர்களின் குரலில் வந்தபோது அது ஒரு சுகமான அநுபவமாக இருந்தது. (திரு சஞ்சை அவர்கள் செம்பொன்னார்கோயில் திரு வைத்தியநாதனிடம் சில இசை நுணுக்கங்களைக் கற்கிறார்) அன்று பாடிய இராக ஆலாபனைகள் அனைத்திலுமே அப்படியொரு மெருகு; ஓர் இனிமை; ஒரு சுகம். ரவிசந்திரிகாவில் நிரவதி சுகதா - நெடுஞ்சாலை ஒன்றில் வேகமாக, அதேவேளை குலுங்காமல் வண்டிபோவதுபோன்ற ஓர் உணர்வு.

திருவாரூர் ராமசாமிப்பிள்ளை அன்றைய கச்சேரிக்கு வந்திருந்தால், 'ஈன்ற பொழுதிற் பெரிதுவந்து' இருப்பார். அவரின் 'ஜெகதீஸ்வரி'யை மோகனமாக காஞ்சிப் பட்டுடுத்தி, நகையெல்லாம் போட்டு மேடையில் ஊர்வலமாக சஞ்சை அவர்கள் அழைத்து வந்தபோது உடல்

சிலிர்த்தது; கண்கள் பனித்தன. குறிப்பாக, சரணத்தில் ஸ்வரஅட்சரமாக வரும் 'த' வாக்கேயகாரர் என்னவெல்லாம் நினைத்துப் போட்டாரோ, அத்தனை சுகமும் வந்ததை, கேட்டுத்தான் அநுபவிக்கவேண்டும்; எழுத்தில் வடிக்க முடியாது. தொடர்ந்து இருபது நிமிட இடை வேளையிலும் காதில் ஜெகதீஸ்வரியின் காற்சிலம்புகள் ஒலித்துக்கொண்டே இருந்தன.

'ஆருக்கும் அடங்காத நீலி' இடைவேளையின் பின் பேகடா இராகத்தில் வந்தாள். முத்தையா பாகவதரின் முத்தான உருப்படிகளில் இதுவும் ஒரு முத்து. பேஹாக் ஆலாபனையை சஞ்சை தொடங்கியபோது சஞ்சையின் வாடிக்கை ரஸிகனான நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன். காரணம், பிருந்தாவன சாரங்க, ராகேஸ்ஸ்ரீ, பேஹாக் போன்ற இராகங்களிலே சஞ்சை அவர்கள் இராகம், தானம், பல்லவி பாடுவதுதான். என் கணிப்பு பிழைபோகவில்லை. திஸ்ரதிரிபுடையில் அமைந்த பல்லவி, கற்பனா ஸ்வரங்களைத் தொடர்ந்து வலஜி, ஆனந்தபைரவி, கன்னட, ரஞ்சனி, தேநுகா ஆகிய இராகங்கள் இராகம், தானம், பல்லவிக்கு முற்றுப்புள்ளி வைத்தன. பின் சுத்ததந்யாசி, தேஷ், சிந்துபைரவி, மாண்டு ஆகிய இராகங்களில் சில்லறை உருப்படிகள் வந்தன.

மஹாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தமிழிலே கவிதைகள் எழுதுவதில் மிகவும் வல்லவர். அவரின் கவித்திறனைப் பாடவந்த ஒரு புலவர் 'எனை வைத்தி, எனை வைத்தி எனப்பதங்கள் இறைஞ்சி நிற்ப, இனிவைப்பாம் இனி வைப்பாம் பொறுத்திடுமின் பொறுத்திடுமின்' என்று பாடு கிறார். தமிழ் வார்த்தைகள் மஹாவித்துவானின் கவிதைகளிலே இடம்பிடிப்பதை பெருமையாக, சிறப்பாகக் கருதி அவர் வீட்டு வாசலிலே வரிசையாக நின்று என்னை உங்கள் பாட்டிலே வைக்கக்கூடாதா? என்று கெஞ்சுகின்றன. அவரோ, இனி வைக்கிறேன், இனி வைக்கிறேன் - கொஞ்சம் பொறுங்கள் என்று அவற்றுக்கு ஆறுதல் கூறுகிறார் என்பது பொருள். சஞ்சையின் கச்சேரியின்போதும் இராகங்கள் வரிசையிலே நின்று உங்கள் கச்சேரிகளில் எனைப் பாடு, எனைப் பாடு என்று கேட்கின்றனவோ என்று ஒரு சந்தேகம் மனதில் எழுகிறது; எழுந்தது.


சஞ்சை அவர்கள் சாகித்தியங்களிலும் அதிக கவனம் எடுப்பது தெரிகிறது. வார்த்தை, உச்சரிப்பு என்பன அவர் பாட்டிலே மிக அழகாக அமைந்துள்ளன. தமிழ்ப் பாடல்களையும் கவனமெடுத்துப் பாடுகிறார். உதாரணமாக, செந்தில் ஆண்டவன், ஆருக்கும் அடங்காத நீலி, பிருந்தாவனம் இதுவோ என்று எல்லாமே இன்பமயம்.

திரு எஸ் வரதராஜனின் வயலினில் சஞ்சை அவர்களே உள்ளேயிருந்து மந்த்ர ஸ்தாயியில் பாடுகிறாரோ என்னும் அளவுக்கு வயலின் குழைந்தது. இராக ஆலாபனைகளிலும் சஞ்சை அவர்கள் உதிர்த்த எதையுமே அவர் விட்டுவைக்கவில்லை. தவறாமல் அத்தனை மணிகளையும் எடுத்து மாலையாக்கிவிட்டார்.

நெய்வேலி வெங்கடேஷ் அவர்களின் மிருதங்கத்தில் நாதம் மிளிர்கிறது. பாயசத்தில் போட்ட முந்திரிப் பருப்பு அவருடைய வாசிப்பு. நறுக்கென்று இருக்கிறது. தனியிலும் நடைபேதம் பிரமாதம். திரு பிரகாஷ் கடம் நன்றாக வாசித்தார். வெங்கடேஷின் வேகத்துக்கு ஈடுகொடுக்கவேண்டுமே! வழமையான பிரகாசம் அவர் முகத்தில் அன்று இல்லை. உடல்நலம் இல்லையா அல்லது வழி நடந்த இளைப்போ தெரியவில்லை.

வந்திருந்த அனைவரும் அற்புதமான, ஆத்மார்த்தமான ஒரு கச்சேரியைக் கேட்ட முழு மனத்திருப்தியோடு வீடு சென்றிருப்பார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. கச்சேரி முடியும்வரை, மூன்றுமணி நேரம் யாருமே எழுந்து வீடு போகாதது அதற்குச் சான்று.

**– ஸ்ரீந்தோளம்**


JK Gold House & Fashion House
your family fashion & jewel house in croydon
ஆடை ஆபரணம்
வாங்க
ஆசை பூர்த்தியாக
நீங்கள் என்றும்
நாடவேண்டிய
ஒரே இடம்
JK GOLD HOUSE & FASHION HOUSE JK GOLD HOUSE & FASHION HOUSE JK GOLD HOUSE & FASHION HOUSE JK GOLD HOUSE & FASHION HOUSE
020 8684 4577
314 - 316 London Road, West Croydon, Surrey CRO 2TJ
(In front of Best Food Supermarket)

# அயோத்தி

(முத்தித் தலங்கள்)

சாவகச்சேரியூர் டாக்டர் கதிர்காமநாதன்

இந்தியாவின் உத்தரபிரதேசத்தில் இருக்கும் அயோத்தி இராமன் பிறந்த இடமாகும். இராமன் திருமாலின் தசாவதாரத்தில் ஏழாவது அவதாரமாகும். இது ஏகபத்தினி விரத அவதாரம். இதனால் இந்து மதத்தினர் போற்றியும் புகழ்ந்தும் பெருமைப்படும் இடம் இதுவாகும். இதேபோன்று பௌத்த, ஜெயின், சீக், முஸ்லீம் மதத்தினர் கொண்டாடும் இடமும் இதுவே.

நைமிசாரண்யத்திலிருந்து பிற்பகல் தொடக்கம் காரில் பிரயாணம் செய்து அயோத்தியை இரவு 7:30மணி போல் அடைந்தோம். இம்முறை எமது பிரயாணம் சிறப்பாகவும், சுலபமாகவும், அமைந்திருந்தது. கார் சாரதிக்கு ஹிந்தி மட்டும் தான் தெரியும். இதனால் ஹிந்தி தமிழ் ஆங்கிலம் தெரிந்த தமிழர் ஒருவரையும் அழைத்து சென்றிருந்தோம்.



"ராம்" என்ற சைவ ஹோட்டலுக்கு இரவு தங்குவதற்காக சென்றோம். எமை உட்புகவிடாது தெருவை அடைத்து வரவேற்பு காத்திருந்தது. பெட்ரோல்மக்ஸ் வெளிச்சத்தில் வாத்ய கோஷ்டி ஒன்று இசைமாரி பொழிந்து கொண்டிருந்தது. காரிலிருந்து இறங்கி சமீபமாக சென்றோம். அங்கே அந்த கோஷ்டி ஒரு மாப்பிள்ளையை அழைத்து செல்லும் ஊர்வலமாக இருந்தது. எளிய அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் பழையகார், 'பாண்ட்' வாத்திய இசையோடு அமர்ந்திருந்தார் மாப்பிள்ளை! ஏழைகளின் இதயத் துடிப்புடைய இக்காட்சியை கண்ட பின்னர் தான் எம்மால் உள்ளே செல்ல முடிந்தது.

**ராம் காட்:** அயோத்தியின் ராம் காட் எனும் இடம் தான் முக்கியமானதாகும். இங்குதான் இராமர் பிறந்தார். இவ்விடம் பலத்த பாதுகாப்போடு கூடிய பிரச்சனைக்குரிய இடமுமாகும். இவ்விடத்தை காலை 6:30மணி தொடக்கம் 10:30 மணி மட்டும் மாலை 3:00 மணி தொடக்கம் 6:00மணி மட்டும் தரிசிக்கலாம். நாங்கள் அதிகாலை நீராடி 6:30 மணிக்கு முன்பே சென்றோம். சனக்கூட்டம் அவ்வளவாக இல்லை. நாங்கள் தான் முதல் சென்றவர்கள். பொலிஸ்காரர் குழுமி இருந்தனர்.

இவர்கள் நாம் உட்செல்ல முன்னரே சோதனைச் சாவடியில் கமரா, கைப்பை போன்ற உடமைகளை வைத்துவிட்டு செல்லுமாறு கோரினர். இதற்கான ரிசீதும் தந்தனர்.

இதன் பின்னர் பெண்கள் வேறு ஆண்கள் வேறாக நன்றாகவே சோதித்தனர். அப்பாடா என்ன நிம்மதி? விடுதலை பெற்றது போன்ற உணர்வு. ஒருவர் மட்டும் செல்லக் கூடிய மரங்களால் அமைத்த முட்கம்பி வலைகளால் அடைக்கப்பட்ட பாதையால் சென்றோம். வளைந்து வளைந்து சென்ற பாதை முக்கால் மைல் தூரம் அமைந்திருந்தது. பாதை இருமருங்கிலும் பொலிஸாரின் கண்காணிப்பு. பேச்சு மூச்சு இல்லை கோயிலை ஒருவாறு அடைந்தோம்.

ராம்காட் ஒரு சிறிய கோயிலாகும். மேல் நோக்கிய சரிவில் தகரத்திலான இவ்விடத்தை சுமார் 50 யார் தொலைவிலிருந்து தான் வழிபடலாம். பொலிஸார் கோயிலுக்கும் எமக்கும் இடையிலும் பின்னும் அக்கம் பக்கத்திலும் நின்று கண்காணித்தனர். எனினும் நாங்கள் தமிழில் பேசியதை கேட்ட ஒரு பொலிஸார் எம்மிடம் வந்தார். சற்று திகிலாகவிருந்தது. தமிழில் பேசினார். ஆச்சரியமாக இருந்தது. இந்த இடத்திலும் தமிழா? அவரே முன் வந்து இது இராமர் இலக்குமணன் பரதன் சத்துருக்கன் என்று முன் சென்று கைகளால் காட்டினார். பின்னர் தான் தமிழ் தெரிந்த தெலுங்கர் என குசலம் விசாரித்தார். கூட்டம் அதிகம் இல்லாததாலும் அதிகாலையில் நாங்கள் மட்டும் நின்றதாலும் இத் திருவருள் ஹிந்தி மட்டும் தெரிந்த இடத்திலும் கிடைத்தது. பயம், பரபரப்போடு சென்ற எமக்கு இது மனசாந்தியையும் தெம்பையும் கொடுத்தது. புரோகிதர் ஒருவர் தீபம் காட்டி பிரசாதமும் தந்தார். சித்திரை மாத சுக்கில பட்சத்தில் வரும் நவமி தான் ராமநவமியாகும். இத்தினத்தில்தான் சனத்திரள் மிகக் கூடும்.

**அநுமான் கோயில்:** இக் கோயில் அயோத்தியில் மத்தியில் இருக்கிறது. இங்குதான் அநுமான் அயோத்தியை காவல் புரிந்தாராம். மிக முக்கியமான கோயிலாக கருதப்படுகிறது. ராம் காட்டை வழிபட்டதன் பின்னர் இங்கு சென்றோம். கோயிலை அடைய 76 படிகள் ஏற வேண்டும். அப்போது ஒரே பக்தர் கூட்டம். இங்கு பொலிஸார் இல்லை. கீழிலிருந்து மேலே பார்த்தால் பிள்ளையார் கோபுரத்தில் உச்சியில் இருப்பதை காணலாம். படிகளில் ஏறும் போது இருமருங்கிலும் பிச்சைக்காரர் இருந்தனர். கோயிலினுள் சென்று படுத்திருக்கும் தங்கத்திலான ஆஞ்சநேயரை வணங்கினோம். அதன் பின்னர் கனகபவன் சென்றோம்.

**கனகபவன்:** தூரத்திலிருந்து பார்க்கும்போது இவ்வழகிய மாளிகையை நின்று ரசிக்கத்தான் செய்யும். சந்தன நிறமுள்ள இம்மாளிகையில் தான் இராமர் சீதையோடு அரசாண்டாராம். காலை நேரம் 9மணி இருக்கும் உட் செல்லும்போது மேளமும் மணி ஓசையும் கேட்டன. மக்கள் ஓடோடி உட்சென்றனர். நாமும் பின் தொடர்ந்து விரைந்து சென்றோம். அப்போது மக்கள் யாவரும் அமர்ந்து பூசையை பார்த்துக் கொண்டிருந்தனர். இங்கு தங்க சிம்மாசனமும் கிரீடமும் இருக்கின்றன. இராமபிரான் சீதாதேவியோடு அமர்ந்த நிலையில் அரசாட்சி செய்வது போல் காட்சியளித்தார். ஏறக்குறைய அரை மணித்தியாலத்திற்கு தீபதூபங்களோடும் பலவித உபசாரங்களோடும் இது நடைபெற்றது. எம்மைக் கவர்ந்தது அங்கு மேளம் வாசித்த விதம். பிரமாண்டமான மேளத்தை மூலை ஒன்றில் கட்டித் தூக்கி சரித்து வைத்து ஒருவர் டாம் டாம் என அடித்தது. இவ்வோசை ஒரு நேர்ப்பாட்டமான இசையில் நேர்த்தியாக விருந்தது. வேறொரு இடத்திலும் இவ்வாறு நாங்கள் காணவில்லை. பின்னர் வால்மீகி கோயில் சென்றோம்.

**வால்மீகி கோயில்:** பத்துப் பதினைந்து படிகள் ஏறி இப்பெரிய கோயிலை அடைந்தோம். கோயிலின் நாற்புற சுவர்களில் வால்மீமியின் இராமாயண சுலோகங்கள் எழுதப்பட்டு இருந்தன. பீடத்தில் வால்மீகியும் இரு சீடரையும் காணலாம். வால்மீகி என்பவர் பிராமணராக பிறந்தவர்.

பெரிய குடும்பம். வறுமையால் வாடினார். இதை தீர்க்க கள்வனாக காட்டினுடாக வருவோரை துன்புறுத்தி வழிப்பறி செய்தார். வறுமை நீங்கியது. முனிவர் ஒருவரை சந்தித்து பாவமென உணர்ந்தார். காட்டிலே தவமிருந்தார் மனைவிமக்களை விடுத்து பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி 12 வருடங்கள் இருந்தார். அவரை சுற்றி கறையான் புற்றுக்கள் தோன்றின சமஸ்கிருத மொழியில் கறையான் புற்றுகளை வால்மிகம் என அழைப்பார். இதனால் அவர் பெயர் வால்மீகியாக மாறியது. இவர் இராமாயணத்தை சமஸ்கிருத மொழியில் எழுதினார்.
இதிகாசங்கள் இரண்டு. ஒன்று பாரதம். மற்றது இராமாயணம். இராமாயணத்தை ஹிந்தியில் எழுதியவர் துளிசிதாசர்- தமிழில் கம்பர். கம்பரின் இராமாயணத்தில் அயோத்தியா காண்டம் தான் சிறந்தது என குறிப்பிடத்தக்கது.

**சரயு நதி:** அயோத்தியின் புண்ணிய நதியாகும். இராமர் பரபதம் அடைந்தது இந்நதியில் தான். இதனால் பாவங்களை தீர்க்கும் நதியாக இது கருதப்படுகிறது. இமயமலையிலிருந்து கங்கை நதியின் கிளையாக உத்தர பிரதேசத்தில் ஓடுகிறது. ராம நவமியன்று ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு நீராடுவர். மதிய வேளை நாங்களும் நீராடினோம் அகலமான நதி. ஒரு புறம் புகையிரத பாலம், மறுபுறம் தெருப்பாலம் இடையில் நீராடும் துறை. அதன் பின்னர் சங்கற்பம் செய்தோம். பின்னர் நாகேஸ்வரநாத் கோயில் சென்றோம்.

**நாகேஸ்வரநாத் கோயில்:** சரயு நதிக்கு அருகிலுள்ள கோயிலாகும். தாமரை மொட்டுப் போல் தோற்றமுளது. 1750ம் ஆண்டு கட்டப்பட்டது. அழகிய தோற்றம். இக் கோயிலிலுள்ள லிங்கத்தை இலைகள் பூக்களால் அர்ச்சனை செய்து பின்னர் பாலால் அபிடேகம் செய்தோம். தொட்டுத் வணங்கி மனநிறைவு பெற்றோம். மதிய பூசையை காணும் வாய்ப்பும் எமக்கு கிடைத்தது.

மதிய போசனத்திற்கு மலையாளத்தவர் பரிபாலிக்கும் “சந்திரா” ஹோட்டலுக்கு சென்றோம். முதலாளி ஆங்கிலத்தில் உரையாடி, உபசரித்து அன்புடன் கவனித்தார். எமது அகோர பசியும் தீர்ந்தது.

இராமன் என்றால் ஆனந்தமானவன் என்ற பொருள். துன்பத்திலும் இன்பமானவன்! அயோத்தியில் தான் துளசிதாசனர் “ராம” என்ற மத்திரத்தை ஓதி தீட்சை பெற்றார். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான இசைமேதை தியாகராஜர் இராமரை பாடி தரிசனம் கண்டவர்.

அயோத்தி முத்தி தலம் மாத்திரமல்ல அரசியல் சமய இலக்கிய முக்கியத்துவம் உடையதுமாகும். உத்தர பிரதேசத்திலிருக்கும் அயோத்தியை விமான மூலமாகவும் புகையிரத மூலமாகவும் எளிதில் அடையலாம். காசி சென்றும் அயோத்தியை அடையலாம். எமக்கு இருமுறை அயோத்தியை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது.

அன்பின் சின்னமாக மகாத்மா காந்தி சுடு பட்டு இறக்கும் போது இறுதியாகக் கூறியது “ராம் ராம்” என்பதே.

“நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
ஜன்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையில் “ராமா” என்றஇரண் டெழுத்தினால்”.



# கண்ணனும் தாத்தாவும்

-முத்து-

இங்கிலாந்தில் புதுவருடம் பிறந்ததோடு தொடர்ந்து பனிமழை பொழிந்தது. அந்தப் பனி தரையிலே உறைந்து எங்கும் எவரும் போகமுடியாதபடி போக்குவரத்து அனைத்தையும் தடைசெய்துவிட்டது. கிறிஸ்துமஸ் விடுமுறையைத் தொடர்ந்து மேலும் சில நாள்கள் பள்ளிக்கூடங்கள் மூடப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. அதனால், கண்ணனும் பள்ளிக்குப் போகாது தாத்தாவுடன் இருந்து யன்னல் ஊடாக வெளியே பஞ்சு பறப்பதுபோலப் பெய்யும் பனிமழையின் அழகை இரசித்துக்கொண்டிருந்தான்.

கண்ணன் : பனிபெய்வது எவ்வளவு அழகாக இருக்கிறது தாத்தா! வெள்ளைப் பூவிதழ்களை யாரோ மேலேயிருந்து தூவுவதுபோல இருக்கிறது. அது கீழே விழுந்து படிந்தபோது உலகமே வெள்ளைப் பட்டுத்துணியால் போர்த்தப்பட்டிருப்பதுபோலத் தெரிகிறது. இல்லையா தாத்தா?

தாத்தா : நன்றாக இயற்கை அழகை இரசிக்கிறாயே கண்ணா! பூமாதேவி வெள்ளைப் பட்டாடை கட்டி அழகாகத் தெரிகிறாள்.

கண்ணன் : பூமாதேவி என்று உலகத்தைத்தானே சொல்கிறீர்கள் தாத்தா?

தாத்தா : ஆமாம் கண்ணா! பூமியைப் பெண்ணாகப் போற்றுவது தமிழர் பண்பாடு கண்ணா!

கண்ணன் : ஏன் தாத்தா அப்படி?

தாத்தா : வீட்டில் ஒரு தாய்தான் குடும்பத்தில் எல்லோருக்கும் வேண்டியவற்றைச் செய்து தருகிறாள். அதுபோல பூமித் தாயும் மனிதருக்கு வேண்டியதெல்லாம் தருகிறாள்.

கண்ணன் : நீர், காற்று, உணவுப் பொருள்கள். வேறென்ன தாத்தா?

தாத்தா : நெருப்பு. உலகிலுள்ள பொருள்களை வைத்துத்தான் மனிதன் நெருப்பை ஏற்படுத்தினான். மேலும் கண்ணுக்கு இனிய காட்சிகள், காதுக்கு இனிய ஒலிகள்.... மனிதன் அநுபவிக்கும் எல்லாமே இயற்கை எமக்குத் தந்ததுதான் கண்ணா! இப்போது பார். நாங்கள் எவ்வளவு நேரம் இந்தப் பனிப்பொழிவை இரசித்துக்கொண்டு இருக்கிறோம்.

கண்ணன் : ஆமாம் தாத்தா. நீங்கள் சொல்வது உண்மைதான். அதோ அந்த மரங்களைப் பாருங்கள். வெள்ளைப் பூக்கள் பூத்துக் குலுங்குவது போல இருக்கிறது அல்லவா?

தாத்தா : ஆமாம் கண்ணா! மிகமிக அழகாய் இருக்கின்றன. இயற்கை அழகுக்கு ஈடாக எதுவுமே இல்லை. கண்ணன்: மனிதர்களும் எவ்வளவோ அழகான பொருள்கள் எல்லாம் செய்கிறார்கள். சிற்பம், சித்திரம், ஓவியம் என்று எத்தனையோ செய்கிறார்களே தாத்தா.

தாத்தா : ஆமாம் கண்ணா! மனிதர்களும் கண்ணைக் கவரும் எத்தனையோ பொருள்களைச் செய்கிறார்கள். இருந்தாலும் இயற்கையின் அழகை மிஞ்ச முடியாது. கோடையில் எத்தனையோ விதம் விதமான பூச்செடிகள் வளர்ந்து அழகிய பல வண்ணங்களில் பூக்கின்றன. ஒரு பூவிலேயே பல வர்ணங்களைக் காண முடிகிறதல்லவா? மனிதனால் இதைச் செய்ய முடியுமா? அதுதான் அப்படிச் சொன்னேன்.

கண்ணன் : நீங்கள் சொல்வது சரிதான் தாத்தா! இந்த வண்ணத்துப்பூச்சியிலே எத்தனை நிறங்கள்? அதேபோல பறவைகளிலும் எத்தனை நிறங்கள்?

தாத்தா : எதையும் கூர்ந்து கவனித்தால் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் அழகு இருப்பதைக் காணலாம். அதுசரி, இன்றைக்கு என்ன படிக்க விரும்புகிறாய்? சொல் பார்ப்போம். அதற்கு முன் பாட்டியிடம் கேட்டு சூடாக ஒரு காப்பி வாங்கி வா. குடித்துக்கொண்டே பேசுவோம்.

கண்ணன் : ஆமாம் தாத்தா. அது நல்ல யோசனைதான்.
(சில நிமிடங்களின் பின் கண்ணன் காப்பியுடனும் தனக்கு ஒரு கிண்ணத்தில் பாலுடனும் திரும்பி வருகிறான்.)
தாத்தா! இதோ உங்களுக்கு காப்பி. குடியுங்கள்.

தாத்தா : சரியடா கண்ணா! நன்றி. (தாத்தா காப்பியை அருந்துகிறார்) காப்பி குடித்தவுடன் ஒரு தெம்பு வந்துவிடுகிறது. சரி, இன்றைக்கு என்ன படிக்கலாம்? சொல்!

கண்ணன் : எனக்கு இன்றைக்கு ஒரு கதை சொல்லுங்கோ தாத்தா. இந்தக் குளிரில் உங்களுக்குப் பக்கத்தில் இருந்து கதை கேட்க நன்றாக இருக்கும்.

தாத்தா : சரி. நான் முன் படித்த கதை ஒன்று சொல்லுகிறேன். கேள். நீ சேக்கிழார் பெருமானைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?

கண்ணன் : ஆமாம் தாத்தா, அறுபத்துமூன்று நாயன்மார்களின் (சிவனடியார்களின்) வரலாற்றைத் தொகுத்து பெரியபுராணம் என்ற நூலாக எமக்குத் தந்தார் என்று சைவ முன்னேற்றச் சங்கம் நடத்தும் சமய வகுப்பிலே சொல்லித் தந்தார்கள்.

தாத்தா : நல்லது! இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறாயே! கெட்டிக்காரன். சேக்கிழார் சிறுவனாக இருந்தபோதே மிகவும் அறிவு நிரம்பியவராக விளங்கினார். இவருடைய தந்தையார் அநபாயன் என்ற சோழ மன்னனின் அரசவைப் புலவராக இருந்தவர்.

கண்ணன் : அப்படியா தாத்தா? அரசர்கள் புலவர்களுக்கு அவ்வளவு மதிப்புக் கொடுத்து அரச சபையில் வைத்திருப்பார்களா?

தாத்தா : ஆமாம் கண்ணா. அந்தக் காலத்தில் புலவர்களிடந்தான் அவர்கள் அறிவுரை கேட்பார்கள். ஏனென்றால், புலவர்கள் நல்ல நீதி நூல்கள், தர்மசாத்திரங்கள் யாவற்றையும் படித்து, தேர்ந்து நல்ல அறிவாளிகளாக இருப்பார்கள். அதனால் நாட்டை எவ்வாறு நீதி தவறாமல் நல்லாட்சி செய்வதென்று தேவையான நேரத்தில் அறிவுரை சொல்லி அரசர்களை நல்வழிப்படுத்துவார்கள்.

கண்ணன் : அரசனுக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் புலவர்களிடம் அறிவுரை கேட்பார்கள் என்று சொல்லுகிறீர்கள். இப்போது அந்த முறை இல்லையே தாத்தா!

தாத்தா : ஆமாம் கண்ணா! மன்னர் நாட்டை ஆளும் முறை மாறிவிட்டது. மக்களாட்சி முறை வந்துவிட்டது. இதைப்பற்றி உனக்கு இன்னொருநாள் சொல்லுகிறேன். சேக்கிழார் சிறுவனாக இருந்தபோது அவருடைய பெயர் அருண்மொழித்தேவர். இவர் தன்னுடைய தந்தை ஒரு நாள் மிகவும் கவலையாக உட்கார்ந்திருப்பதைக் கண்டார்.

கண்ணன் : எதற்கப்பா கவலையாக இருக்கிறீர்கள் என்று கேட்டிருப்பார். அதற்கு அவருடைய அப்பா என்ன சொன்னார் தாத்தா?

தாத்தா : அதற்கு அவருடைய அப்பா, "மகனே! இன்று அரசர் என்னை மூன்று கேள்விகள் கேட்டார். எனக்கு அவற்றின் பதில் உடனே தெரியவில்லை. என்ன சொல்வதென்று

தெரியாமல் தடுமாறிவிட்டேன். பிறகு, அதற்கு உரிய விடைகளை யோசித்து நாளைக்குச் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதைப்பற்றித்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். இன்னும் விடையைக் கண்டுபிடிக்க முடியவில்லை" என்றார்.

கண்ணன் : அந்தக் கடுமையான கேள்விகளைச் சொல்லுங்கோ தாத்தா.

தாத்தா : முதற்கேள்வி : மலையிலும் பெரியது எது?
இரண்டாவது கேள்வி : நிலத்திலும் பெரியது எது?
மூன்றாவது கேள்வி : கடலிலும் பெரியது எது?
உனக்கு இதில் எதுக்காவது பதில் தெரியுமா கண்ணா?

கண்ணன் : புலவருக்கே தெரியாவிட்டால் எனக்கு எப்படித் தெரியும் தாத்தா? ஆனால் பூமியை விடச் சூரியன் பெரிதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் இப்போ அருண்மொழித்தேவர் ஆகிய மகன் என்ன சொன்னார் என்று சொல்லுங்கோ தாத்தா.

தாத்தா : மகன் ஒரு ஏட்டுச்சுவடியை எடுத்து மூன்று கேள்விகளுக்கும் விடைகளை எழுத்தாணியால் எழுதித் தந்தையிடம் கொடுத்தார்.

முதலாவது கேள்விக்கான பதில்:
**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.**

இரண்டாவது - நிலத்திலும் பெரியது
**காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது.**

கடலிலும் பெரியது - மூன்றாவது கேள்விக்கான பதில்
**பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்**
**நன்மை கடலிற் பெரிது.**
என்று மூன்று வினாக்களுக்கும் சரியான விடைகளைக் கண்டு தந்தையார் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மகனின் புத்திக் கூர்மையைப் பாராட்டினார்.

கண்ணன் : மூன்றும் திருக்குறட் பாடல்கள் போலத் தெரிகிறதே தாத்தா!

தாத்தா : சரியாகச் சொன்னாய். மூன்றும் திருக்குறளேதான். திருக்குறளிலே சொல்லப்படாத விஷயங்கள் உலகத்திலே எதுவுமே இல்லை என்று முன்னர் உனக்குச் சொல்லியிருக்கிறேனே. இல்லையா?

கண்ணன் : ஆமாம் தாத்தா. அதற்கு இது ஒரு அருமையான எடுத்துக்காட்டு. பிறகு என்ன நடந்தது?

தாத்தா : தந்தையார் மகன் எழுதிக்கொடுத்த விடைகளை எடுத்துக் கொண்டுபோய் அரசனிடம் காண்பித்தார். அரசனும் அவையிலிருந்த சான்றோரும் மகிழ்ச்சியும் வியப்பும் அடைந்தார்கள். உடனே அரசன் அருண்மொழித் தேவரைப் பல்லக்கில் அழைத்து வரும்படி காவலரைப் பணித்தான். அரச சபைக்குப் பல்லக்கில் வந்து இறங்கிய அருண்மொழித்தேவரை அரசன் எழுந்து வரவேற்று அமரச்செய்தான். அதுமட்டுமன்றி அவருடைய அறிவாற்றலைக் கண்டு அவருக்குத் தலைமை அமைச்சர் பதவியையும் வழங்கினான்.

கண்ணன் : அப்படியா! அமைச்சரான இவர் பின்பு எப்படி பெரியபுராணம் பாடினார்?

தாத்தா : இவர் அமைச்சர் பதவியிலிருந்து தன் கடமையைத் திறம்படச் செய்தார். பதவி ஆசையில் மூழ்கிவிடாது திருநாகேஸ்வரம் என்னும் ஆலயத்துக்குத் தினந்தோறும் சென்று வழிபட்டு வந்தார். அடியார் வரலாறுகளைக் கூறும் கல்வெட்டுக்கள் ஓலைச்சுவடிகள் என்பவற்றைத் தேடி ஆராய்ந்து வந்தார் மநுநீதிச்சோழனின் வரலாற்றை எழுதினார். அவரின் அறிவாற்றலைக் கண்ட சோழ மன்னன் இவரை ஒரு காப்பியம் இயற்றும்படி கேட்டுக்கொண்டான். அதை நிறைவேற்றும் பொருட்டு அவர் தில்லைக்குச் சென்று நீராடி நடராஜப் பெருமானை வணங்கி நின்று அடியார்களின் சிறப்பைப்பாட அடியெடுத்துத் தரும்படி இறைவனை வேண்டினார். உடனே "உலகெலாம்" என்று அசரீரி ஒன்று ஒலித்தது.

கண்ணன் : அசரீரி என்றால் என்ன தாத்தா?

தாத்தா : கடவுளால் அருளப்பட்ட வார்த்தை. கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் இறைவனின் குரல். சரீரம் (உடம்பு) அற்றது அசரீரி. கடவுள் எடுத்துக் கொடுத்த முதல் வார்த்தையைக் கொண்டு மீதிப் பாடலைப் பாடினார். நான் அந்தப் பாடலைப் பாடுகிறேன். கேள்.

கண்ணன் : எனக்கு அந்தப் பாடல் தெரியும் தாத்தா. நான் உங்களுக்குப் பாடிக் காட்டுகிறேன்.

தாத்தா : எங்கே! பாடு, கேட்கலாம்.

கண்ணன் : உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

தாத்தா : தவறில்லாமற் சரியாகச் சொல்லிவிட்டாய். கெட்டிக்காரன்.
ஆனால் திருமுறைகள் பாட முன்னும் பின்னும் திருச்சிற்றம்பலம் என்று சொல்லிவிட்டே பாடி முடிக்கவேண்டும்.

கண்ணன் : நன்றி தாத்தா. பிறகு என்ன நடந்தது? சொல்லுங்கோ.

தாத்தா : அருண்மொழித்தேவர் தொடர்ந்து அறுபத்துமூவர் வரலாற்றையும் ஆராய்ந்து அறிந்து ஒரு நூலாக (புத்தகமாக) எழுதினார். திருத்தொண்டர் புராணம் என்று அதற்குப் பெயரிட்டார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிய திருத்தொண்டத்தொகை இந்த நூலுக்கு ஆதாரமாக அமைந்தது. தொண்டர் பெருமையைச் சொல்வதனால் அது பெரியபுராணம் ஆயிற்று.

கண்ணன் : இப்படி அவர் எழுதி வைத்தபடியால் இன்று நாங்கள் நாயன்மார்கள் வரலாற்றை அறிய முடிகிறது.

தாத்தா : ஆமாம் கண்ணா. சேக்கிழாரின் தொண்டு அளவிடுவதற்கு அரியது. இப்படி எத்தனையோ பெரியவர்கள் உலகிலே தோன்றி மக்களுக்கு நல்லவற்றை செய்துள்ளார்கள். நீயும் பெரியவனாகி மக்களுக்கு ஏதாவது நல்லது செய்யவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன் கண்ணா!

கண்ணன் : நிச்சயமாகத் தாத்தா. இன்றைக்கு நல்ல நீண்ட கதையொன்று சொல்லிவிட்டீர்கள். இனி நீங்கள் கொஞ்சம் ஓய்வு எடுங்கோ. நான், அதோ அந்தப் பனிக் குவியலில் நண்பர்களோடு விளையாடிவிட்டு வருகிறேன்.

தாத்தா : சரி கண்ணா! உனக்கு உடற்பயிற்சியும் அவசியந்தானே!

# திருக்குறள் கற்போம்

## பண்புடைமை

## Courteousness

எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு

யாவரிடத்திலும் எளிய முறையில் பழகுவதால் பண்புடைமை என்னும் நல்ல நெறியினைப் பெறுதல் எளியது என்று நூலோர் கூறுவர்.

If one is easy of access to all, it will be easy for one to obtain the virtue called goodness.

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

பிறர்மேல் அன்புடையன் ஆதலும் நல்லியல்புகள் அமைந்த குடிப்பிறப்பிற்கேற்ற குணஞ்செயல்கள் உடையனாதலும் ஆகிய இவை இரண்டும் பண்புடைமை என்று உலகோர் சொல்லும் நன்னெறியாகும்.

Affectionateness and birth in a good family, these two constitute what is called a proper behaviourto all.

உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

உடலுறுப்புக்களால் ஒத்தல் மக்கள் ஒப்பாகாது. செறியத்தக்க பண்பால் ஒத்தலே பொருந்திய ஒப்பாகும்.

Resemblance of bodies is no resemblance of soul; true resemblance is the resembalnce of qualities that attract.

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

ஈடுபாட்டுடன் நன்மை செய்த பிறர்க்குப் பயன்பட்ட வாழ்க்கையுடையாரது பண்பினை உலகம் கொண்டாடும்

The world applauds the character of those whose usefulness results from their equity and charity.

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

விளையாட்டிலும் ஒருவரை இகழ்ந்து பேசுதல் துன்பம் தரும். உலக ஒழுக்கமறிந்து ஒழுகுவாரிடத்துப் பகையிடத்தும் நல்ல பண்புகள் உள்ளன.

Reproach is painful to one even in sport; those (therefore) who know the nature of others exhibit (pleasing) qualities even when they are hated.

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

பண்புடையாரைப் பொருந்தி இருத்தலால்தான் உலகம் இயங்கி வருகிறது. அவர்கள் இருத்தல் இல்லையென்றால் உலகம் மண்ணில் புகுந்து மாய்ந்தொழியும்.
The (way of the) world subsists by contact with the good; if not, it would bury itself in the earth and perish.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்

நன்மக்கட்குரிய பண்பு இல்லாதவர் அரத்தின் கூர்மை போன்ற கூர்த்த அறிவுடையாராயினும் ஓரறிவுடைய மரத்தை ஒப்பர்.
He who is destitute of (true) human qualities (only) resemble a tree, though he may possess the sharpness of a file.

நண்பாற்றா ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை

தம்மொடு நட்பினைச் செய்யாமல் பகைமையால் அன்பற்ற செயல்களைச் செய்பவரிடத்தும தாம் பண்புடையாராய் ஒழுகாதிருத்தல் அறிவுடையாருக்கு இழிந்ததாம்.
It is wrong(for the wise) not to ehibit(good) qualities even towords those who bearing no friendship9forthem) do only hat is hateful.

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்

பிறரோடு கலந்து பேசிச் சிரித்துப் பழக முடியாதவர்க்கு இம்மிகப்பெரிய உலகம் பகற்பொழுது இருளிடத்துக் கிடந்ததாம்.
To those who cannot rejoice, the wide world is buried in darkness even in (broad) daylight.

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று

பண்பற்றவன் எய்திய பெருஞ்செல்வம் அவனது குற்றத்தால் ஒருவனுக்கும் பயன்படாது கெடுதல் நல்ல பால், வைத்திருந்த கலத்தின் குற்றத்தால் திரிந்து கெட்டாற் போலும்.
The great wealth obtained by who has no goodness will perish like pure milk spoilt by the impurity of the vessel.

தமிழ்: முனைவர் இரா சாரங்கபாணி English: Rev Drew & John Lazarus

Hinduism in search of answers…

# HINDU CALENDARS & PANCHANGAM


## *What is Hindu calendar?*

Apart from the Georgian calendar there are other Vedic and traditional calendars that are still used at various times.

## The time is divided into three Calendars

- Lunar
- Solar
- Cosmic

The Lunar month follows the changing phase of the moon. It is divided into two 15 day Pakshas (Wings). First is KRISHNA PAKSHA (THEI PIRAI ) when moon moves towards New Moon (AMAAVASAI). The second being SHUKLA PAKSHA (VALAR PIRAI ) towards Full Moon (POWRNAMI). Lunar calendar is shorter and every 2-3 years a month is added to fall in line with solar calendar. There are 12 lunar months, each consisting 30 days, each day having **THITHI** (the time between two consecutive risings of the moon & are slightly shorter than solar day).




The solar Calendar (like the western counter part Georgian) contain 24-hour day (12am to 12pm), within 12-month cycle.

Cosmic calendar is based on YUGA currently we are in KALI Yuga.

| Georgian months | Solar Months – Rasis | Purnimanta (Sanskrit) | Tamil (Amanta) |
|---|---|---|---|
| January | Khumba (Aquarius) | Magha | Thai (Jan-Feb) |
| February | Mina (Pisces) | Phalguna | Maasi (Feb/Mar) |
| March | Mesha (Aries) | Chaitra | Pankuni (Mar/April) |
| April | Vrishaba (Taurus) | Vaishaka | Chithirai (April/May) |
| May | Mithuna (Gemini) | Jyaishtha | Vaikaasi (May/June) |
| June | Karkata (Cancer) | Ashadha | Aani (June/July) |
| July | Simha (Leo) | Sharavana | Aadi (July/August) |
| August | Kanya (Virgo) | Bhadrapada | Aavani (Aug./Sep.) |
| September | Thula (Libra) | Ashvina | Purattaathi (Sep/Oct) |
| October | Vrishika (Scorpio) | Krttika | Aippasi (Oct/Nov) |
| November | Dhanus (Sagitarius) | Margashrisha (Agrahanya) | Kaarthikai (Nov/Dec) |
| December | Makara (Capricorn) | Pausha or Taisha | Maarkali (Dec/Jan) |





Indian Solar days begin at sunrise and ends at Sunset unlike the western counterpart.

"Hindus often channelled scientific knowledge to religious uses especially for religious observances. The Hindu concept of time is based on the movements of Sun, Moon and Jupiter. The Sun's movement through the twelve signs of Zodiac demarcate a solar year. The ancient Hindus divided the heavens into twenty seven asterisms (or Nakshatras). The moon journeys through different asterisms in a period of one month, waxing and waning. The planet Jupiter conversely traverses the Zodiac in a period of twelve years. A unit of five such cycles leads to a sixty year cycle, the Brihaspati Chakra, which is the Hindu counterpart of a century. Each individual year within the cycle has a name such as Sri Muha, Bava, Yuva, etc.

A calendar year of 365 days is divided into 4 parts. Each section starts with either a solstice or an equinox, based on the position of the Sun in the celestial sphere. April 14th marks the vernal equinox in the old Hindu calendar while Makara Sankranthi marks the Winter Solstice. Due to the precession of the equinoxes, the dates have moved gradually and now stands about 3 weeks apart.


***Earths view on Makara Sankranthi – Winter Solstice (This is celebrated as Thai Pongal on January 14th)***

It should be noted that these observations and predictions were made by Hindu sages, **thousands of years before the telescope was invented** in the 15th century by westerners.




## *Earths view on Vernal (Spring) Equinox (This is celebrated as Hindu New Year on April 14th)*

With the Sun entering the first Raasi of the Zodiac, its Nothwards journey in heaven commences. As the earth while revolving in its axis rotates round the Sun, we have a 24 hour day -12 hours of light and 12 hours of darkness. According to Hindu mythology, for the Devas who reside in the heavens, a day consists of 6 months of day light and 6 months of darkness. The day of the Devas dawns on Makara Sankranthi and goes on until mid July. These six months are called Utharaayanam. The next six montha are called Dakshinaayanam, when their day ends.



The ancient Hindus adored the Sun and called it by various names- Surya, Savitur, Gnayiru, etc. The Sun is symbolised as a visible manifestation of Brahman. Brahman is eternal, but not discernible to the naked eye. The Sun is perceptible, self-luminous, bestowing inexhaustible light, energy, warmth and vitality. The Sun is hence revered as the physical manifestation of Brahman by the Vedic seers.

The rationale of allocating special days for fasts and observances is based on the moon and its influence on the mind. The ancient Hindu sages believed that during certain phases of the moon, nature assists the worshipper by awakening from the Tamasic mental state. These are allegorically illustrated in Puranas as incidents that took place between Devas and Asuras, based on the basic truth that goodness triumphs over evil. These allegories represents the mind of man which is a battlefield between good and evil, knowledge and ignorance, immortality and death.

To the Hindus the Lunar cycle is thus significant in determining the dates for various observances. The concept of 'Thithi' or the stage of the lunar cycle is important. The Thithi is literally a segment of the Sun's reflection on the orbiting moon. There are 30 Thithis in a month with 15 each from full moon to new moon and vice-versa. Of these Thithis, Amaavasai (new moon) , Chathurthi (fourth), Sashti (sixth), Ekaadasi (eleventh) and Paruvam (Full moon) are important.

### *What is Panchangam?*

Panchangam is used by Hindus to find out the Pancha (5) Angas (aspects) of any moment in time. They are **Vaaram** (days), **Thithi**, **Natchatram, Yogam** and **Karanam.**

There are **7 Varams**. They are:

SANI – Saturday – Saturn,
GNAYIRU – Sunday – Sun,
THINGAL – Monday – Moon
SEVVAI – Tuesday – Mars,
PUTHAN – Wednesday – Mercury
VIYALAN – Thursday – Jupiter,
VELLI – Friday – Venus

There are **15 Thithis** (the time between two consecutive risings of the moon)

Prathamai, Thuvithai, Thrithiyai, Sathurthi, Panjami, Sashti, Sapthami, Ashdami, Navami, Thasami, Ekathasi, Thuvathasi, Thriyothasi, Sathurthasi, AMAAVAASAI / PURANAI.

There are **27 Natchatrams: (Constellation)-**

They are:

Achuvini, Parani, Karthikai, Rohini, Miruhaseeridam, Thiruvathirai, Punarpoosam, Poosam, Aayiliyam, Maham, Pooram, Uththaram, Aththam, Siththirai, Siththam, Visaham, Anusham, Kettai, Moolam, Pooradam, Uththaradam, Thiruvonam, Aviddam, Sathayam, Pooraddathi, Uththaraddathi, Revathi

The constellation that is seen rising on the eastern horizon in the evening is called the lunar constellations (Chandhira natchathirams). The constellation that is seen rising on the eastern horizon in the morning is called the Solar constellations (Sooriya natchathirams). Sun remains in each constellation for 14 days.

Each one is named after the constellation seen rising in the evening of the full moon day in the eastern horizon. For example Achuvini is named after constellation of Achuvini, Karthigai – after constellation of Karthigai. Etc.

Mytholigically there are 4 Yugas, eras of the world's existence. The three periods Kritha (Satya), Tretha, and Dvarapa yugas have already elapsed and we are in Kali Yuga currently, which is reckoned to have started at dawn on 18 February 3102 BCE.

Regardless of festivals **Puranai** and **Amavasai** are considered important and many Hindus fast on these days. Fasting on Powrnami is observed for departed mother, and Amavasai fasting is dedicated to departed father, paying special prayers and fast on Powrnami in the month of Chithirai (April) and Amavasai in the month of Aadi (July).

The fourth day Chathurthi is associated with Lord Ganesha. Eighth day (ashtami) and 11th day (Ekadasi) are associated with Vishnu.

**Karanam**

Karanam is half of a thithi.

**Yogam,**

Yogam is derived from both the longitudes of the sun and the moon.

Starting any new venture on the appropriate tithi will fetch iswaryam (lots of wealth and prosperity) for the person. Similarly, any deed done on the right day of the week will enhance the longevity, ie the life span of the person will increase. Any deed done on a day with a good and beneficial star will alleviate the papams (ill effects because of ill deeds). When one does a deed at a time with good and beneficial yogam then that will help all diseases to disappear. Lastly a deed done during the good and beneficial karanam will help the person to achieve the objective of the deed without any hurdles and impediments.

## Why do we have rituals?

***Reformers advocate omitting the religious rites and rituals, saying there is no need for them in our lives. They say, 'If your mind is pure, you do not need these formalities and rituals'.***

***If we do not control our mind, it will wander along the undesirable path. Only one in several thousand people can probably control his/her mind without resorting to rituals and keep it straight. Others need to divert their mind in doing service to humanity or devote in rituals. This is the reason why the rituals are here. Apart from leaving the mind to idle, even if we engage it with rituals, after a short while, it wanders off.***

***The rituals are designed to engage our mind, word and body. While chanting the 'mantra' we do the 'Homam'. While chanting the names of God, we do the 'archana'.***

**(Translated from HH Kanchi Kamakodi Swamigal's Arul Vaaku)**

COMMERCIAL & INDUSTRIAL
GUARDING
CALL NOW FOR A FREE SURVEY AND
QUOTATION

SECURITY GUARD
WANTED

* RETAIL
* CONSTRUCTION
* 24 HOUR RADIO PATROLS
* KEY HOLDING
* ACCESS CONTROL
* CCTV

CHARTER SECURITY

A PROFESSIONAL SERVICE EVERY TIME

1ST FLOOR
CAMBRIDGE ROAD
BARKING
ESSEX
1G11 8NR

TEL: 020 8507 7717
FAX: 020 8507 7702



# WESTERN

## JEWELLERS

*Jewellers & Gem Merchants*

**230,UPPER TOOTING ROAD**
**LONDON SW17 7EW**
**PHONE : 020 8767 3445**

# SILK EMPORIUM

**122 UPPER TOOTING ROAD LONDON SW17 7EN**
**PHONE : 020 8672 1900**

# WESTERN

## JEWELLERS & TEXTILES



**5, PLAZA PARADE, 29-33, EALING ROAD,**
**WEMBLEY, MIDDLESEX HA0 4YA.**
**PHONE : 020 8903 0909**

**OPENNING HOURS**
**Monday to Saturday**
**10.00am - 6.30pm**
**Sunday 11.00am - 5.30pm**



இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (தொலைபேசி : 020 8646 2885) வடிவமைத்து, அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 05-05-2010 அன்று வெளியிடப்படுகிறது.